பக்கங்கள்-16 | தை 13,2013 | விலை-30.00

விளம்பரங்கள்
அனைத்துவகையான
விளம்பரங்களையும்
பிரசுரிக்க
நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே
எமது
தினப்புயல் பத்திரிகை
தொடர்பான அனைத்து
விமர்சனங்களையும்,
ஆக்கங்களையும்,
வரவேற்கின்றோம்.

மலர்-01 | Tel&Fax:(+94)247451360-1, Hot line:0711850885 Email:tthinappuyalnews@yahoo.com | இதழ் -24



## முப்படைகளையும் கொண்டிருந்த புலிகள் தோல்வியைத் தழுவியது ஏன்?

### புலிக் கொள்கையைக் கைவிடாத வரையில் விடுதலை சாத்தியமற்றது

### ஐ.நா.வின் நாடகம் – முள்ளி வாய்க்கால்










# முப்படைகளையும் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் ஏன் தோல்வி அடைந்தனர்?



தமிழீழப் போராட்ட வரலாற்றில், 1983 ஆம் ஆண்டின் பின்னர் தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரையி லான காலப்பகுதியில், இலங்கை அரசுக்கு எதிராகப் பல வெற்றிகளைக் குவித்து வந்த விடுதலைபபுலிகள், இலங்கையில் தமது இராணுவச் சமநிலையையும் நீண்ட காலமாகப் பேணியே வந்தார்கள். இது உலக அரங்கில் புலிகளுக்கு நற்பெயரையே பெற்றுக்கொடுத்தது. இதன் காரணமாக, இலங்கை அரசுடன், 2002 தொக்கம் 2004 வரை பலதரப்பட்ட பேச்சுவார்ததைகளிலும், கலந்து கொண்டமையானது, விடுதலைலப் புலிகளின் வரலாற்றில் மட்டுமன்றி, உலகத் தமிழ் இனமே, தலை நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு பிரபாகரனின் நகர்வுகள், அக்கால கட்டத்தில் வியப்பை ஏற்படுத்தியிருந்தது.

இக்கால கட்டத்தில், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், பேச்சுவார்த்தைகள் பலவற்றை, அரசுடன் நடத்தி மெதுமெதுவாக வெற்றியின்றி விலகிச் சென்றனர். இந்தக்காலகட்டங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைப் பார்ப்போமானால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

இப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில், விடுதலைப்புலிகள் ஆயுதங்களைச் சேகரிப்பதிலும், தமிழ் ஈழத்திற்கான அடுத்த கட்ட நகர்வுகள், என்ன என்பது பற்றி சிந்தித்துச் செயற்பட்டனர். வெளிநாடுகளில் நடைபெற்ற, வெவ்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கை அரசின் உலங்குவானூர்தி (ஹெலிக்கொப்ரர்) மூலம், அரசின் கடவுச் சீட்டுடன், விடுதலைப்புலிகளின் பல முன்னணித் தலைவர்கள் சென்று வந்த அதே நேரம், அதி நவீன ஆயுதத் தளபாடங்களை வாங்குவதிலும், தங்களுடைய வருமானத்தை அதிகரிப்பதிலுமே கவனம் செலுத்தி வந்தனரே, தவிர இதனுடைய பின் விளைவுகள், எவ்வாறு இருக்கும் என்பதனைச், சற்று மறந்தே செயற்பட்டனர்.

இக்கால கட்டத்தில்தான் தமிழ் மக்கள், தமிழீழம் எனப் போராடப் புறப்பட்டது வரலாற்றில், ஒரு திருப்பு முனையாக அமைந்தது. 1 ஆம் 2 ஆம் கட்ட நோர்வேயுடனான பேச்சுவார்த்தைகளில், வன்னித் தலைமைகள், நல்லதொரு தீர்வுகளை முன்னெடுக்கத் தவறிய நிலையில், கிழக்கு மாகணம், கருணா அம்மான் கட்டுப்பாட்டில் தனியாகப் பிரிந்து சென்றதால், விடுதலைப்புலிகளின் போராட்ட் வரலாற்றில் பாரிய ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது.

தமிழ்ச் செல்வன், தமிழேந்தி, பொட்டுஅம்மான் பேன்றோரின், பிரதேச வாதத்தினால், கருணாவின் தனித்துவம், அவரின் இராணுவ இராஜ தந்திர வியூகங்கள் போன்றவை பற்றி, ஒரு குறைந்தளவிலான மதிப்பீட்டையே, விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும், உலகத் தமிழர்களுக்கும் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வாறான பிழையான தகவல்கள் மூலம், தேசியத் தலைவரை வழி நடத்தியதை எண்ணி, புலம்பெயர்ந்து இருந்த தமிழ் இனத்தோடும், ஈழத்தில் மூலை முடுக்கு எங்கும் வாழும் சாதாரண தமிழனும், பிரபாகரனின் உயிரை, ஓயாத அலைகள் தாக்குதல்களின் போது, காப்பாற்றியவரும், புலிகளின் மரபு வழிப் போராட்டத்தின் முன்னோடியாக திகழ்ந்தவருமான, கருணாஅம்மானை எடைபோட முடியாமல், போனதை இட்டு தமிழ் இனம் ஒரு முறை கண்ணீர் வடித்தது உண்மை வரலாறு.

கருணாம்மானின் போராட்ட உத்திகள், அவர்களுடைய சிறந்த கட்டளைகள், (கொமாண்டிங்) தமிழ் ஈழமே மலர்ந்து விடும் என்ற அளவிற்கு, மிகவும் வலிமையானதாகக் காணப்பட்டதை பலரும் மறக்க மாட்டார்கள். சுமார் 6000 இற்கு மேற்பட்ட போராளிகளுடன், தனியாகப் பிரிந்தது உலகத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, இலங்கை அரசாங்கம் உட்பட, பல அரசுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினார் கருணாம்மான் என்பதும்,



குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அன்று தொடக்கம் இன்று வரை, தமி ழீழம் என்ற புலிகளின் இலட்சியம் நிறைவேறாமலே போனது, (கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை) என்று கூறுவதும் பொருத்தமானது. மாவிலாற்றில் மண்ணை அள்ளி, தன் தலையில் போட்டுக் கொண்ட விடுதலைப்புலிகள், மன்னாரை இராணுவம் கைப்பற்றியபோதும், அது அவர்களின் புத்திசாலித்தனம் எனப் பலராலும் கூறப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றியபோதும், அது கிளிநொச்சி அல்ல வேறு இடத்தைக் கைப்பற்றி விட்டு, கிளிநொச்சி என்று கூறுகிறார்கள் என்று கூறப்பட்டது. தரைப்படை, வான்படை, கடற்படை, தற்கொலைப்படை பீல் பைக் படையணி, புலனாய்வுத் துறை, நீதித் துறை, காவல் துறை என்ற பல கட்டமைப்புக்களை தன்னகத்தே கொண்டிருந்த புலிகள், தமிழ் மக்களையும், உலகத்தையும் ஒரு மாய வலைக்குளேயே வைத்திருந்தனர்.

இறுதியாக விடுதலைப்புலிகளை ஒரு காகிதக் கப்பலாக இராணுவ வெள்ளத்தில், புது மாத்தளனில் வைத்து, ஒரு நொடிப்பொழுதில் அள்ளிச் செல்லப்பட்டதை எண்ணிப்பார்க்கும் போது, தமிழ் மக்களின் மனதில் என்றும் ஓர் ஆறாத காயமாக இருந்து கொண்டிருக்கும் அதே நேரம், தலை குனியவேண்டிய நிலையில், நம்மவர்கள் தலைகுனிந்து விட்டார்கள். கடந்த 30 வருடகால தமிழீழப் போராட்டம் பிரபாகரனின் ஆறு அடி நிலத்திற்குள், அண்ணார்ந்து படுத்திருக்கும் காட்சி, தமிழ் மக்களை திக்கு முக்காட வைத்துவிட்டது. இதில் ஒரு விடயத்தை உற்று நோக்கும்போது, கருணாவின் பிளவா? கே.பி இன் இறுதிநேரக் காட்டிக்கொடுப்பா? தமிழீழக்கனவை வெளிப்படாமல் செய்தது? என்பதை எமது மக்கள் எண்ணிப் பார்க்காமலில்லை.

கூட்டிக்கழித்துப் பார்த்தால், எல்லாம் சரி. கே. பி யும் தமிழினத்தை வைத்து, வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார் என்பதுதான் உண்மை. விடுதலைப்புலிகளின் வழமையான போட்டிகள், பூசல்களுக்கு மத்தியில், அவர் ஒரு மாதத்திற்குள் உலகப் புலிகளைத், தன்னுடன் இணைத்துக்கொண்டார்.

அதற்கு முதற்கட்டமாக வினாயகமூர்த்தி, உருத்திரகுமார், தவப்பிரகாசம், இளையதம்பி, டேவிற், பூபாலப்பிள்ளை போன்றவர்களுடன், கிழக்கிலேயே தங்கியிருந்த தயா மாஸ்ரர் போன்றவர்களையும் தன் தலைமைக்குப் பக்கபலமாக இழுத்துக் கொண்டர். தமது செற்பாடடிற்குச் சட்டரீதியாக, உருத்திர மூர்த்தியை கருத்துக்களைப் பரப்புவதற்கும், பண வருமான வரியைப் பெற்றுக்கொள்வதற்கு, தவாவையும், இளைய தம்பியையும் சேர்த்துக்கொண்டு, புதிய நாடகம் ஒன்றை அரங்கேற்றினார் கே.பி.

இவை இவ்வாறு இருந்த போதிலும், பல உலக நாடுகளின் எதிர்ப்பபையும் மற்றும் பல பொருளாதார நெருக்கடிகளையும், சாதுரியமாகச் சமாளித்துக் கொண்டு, சிறந்த இராணுவ நடவடிக்கைகள் மூலம், தொழிநுட்பமான புலனாய்வுத் துறையின் திறைமையுடனும், மஹிந் ராஜபக்ஷ சகோதரர்களின், நிதானமான நடவடிக்கைகளினாலும், புலிகளின் உலகளாவிய வலைப்பின்னல்கள் யாவும், தீவிர மாகக் கண்காணிக்கப்பட்டு ,அவற்றை அழித்து ஒளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழீழத்தின் தலை லவராக தம்மை அறிவித்து, 3 மாதத்திற்குள் இலங்கைத் திருநாட்டில் மண்டியிட்டு, தனது 30 வருடகாலத் தகவல்களையெல்லாம் ஒவ்வொன்றாக வெளிப்படுத்தினார். குமரன் பத்மநாதன் (K.P) இதன் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு விடுதலைப்புலிகளின் தொடர்பாடலை வைத்திருப்போரைக் கைது செய்ய, இலகுவான வழிகளைச் செயற்படுத்திக்கொடுத்தார் கே.பி. இதன் காரணத்தினால், விடுதலைப்புலிகளுக்கு உதவி வழங்கிய பலர் ஒவ்வொன்றாகக் கைது செய்யப்பட்டனர்.



கடைசியில் கே.பியும், இலங்கை அரசிடம் சரணடைந்து விட்டார். முப்படைகளையும் தன்னகத்தே கொண்ட விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள், இலங்கையில் இருந்து அழித்தொழிக்கும் நிலமைக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும், இந்த 30 வருடகாலப் பேராட்டம், பிரபாகரனால் உள்ளெடுக்கப்படாமால் இருந்திருந்தால், தமிழ் இனமே ஒரு அடக்குமுறைக்குள் உள்ளாக்கப்பட்டிருக்கும்.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட, சர்வதேச அரங்கு வரை, இப்போராட்டத்தின் தன்மை பற்றியும், எதற்காகப் இப்போராட்டம்



முன்னெடுக்கப்பட்டது என்பது பற்றியும், விடுதலைப்புலிகளின் போராட்டமே முன்கொண்டு சென்றது. மற்றுமொரு விடயம் என்னவென்றால், அன்று தந்தை செல்வா உரிய முறைில் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறியமையே, பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்திற்குத் தூண்டுதலாக இருந்தது என்பதும் எமது போராட்டத்தின் ஆரம்ப வரலாறு.

இதனிடையே விடுதலைப் புலிகளின் அமைப்பினை விட, புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ரெலோ போன்ற விடுதலை இயக்கங்களும் தமிழீழத்தின் விடுதலைக்காக போரடினார்கள் என்பதும் உண்மைதான். ஆனால் பிரபாகரனின் ஆழுமை போன்று, மேற்குறிப்பிடப்பட்ட இயக்கங்கள் அவ்வாறான தன்மையைக் கொண்டிருக்கவில்லை. என்பதும் மற்றுமோர் உண்மைதான். பிரபாகரன் ஏனைய இயக்கங்களை வளரவிடவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. 30 வருட காலங்கள், தனித் தமிழீழச் சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த பிரபாகரனின் வரலாறு, ஒரு வரலாறாக மட்டும் இருந்து விடாமல், அதற்கான பிரதிபலிப்பும் இன்று ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது என்று கூறினால், அது மிகையாகாது.

ஆயுதப் போராட்டத்தினால் ஏற்பட்ட அழிவுகழைப் பார்க்கின்ற பொழுதும், தற்போது மஹிந்த ராஜபக்வினால் ஒரு பாரிய யுத்த அழிவின் பின், மீண்டும் இரத்த ஆறு ஓடாத ஒரு சமாதானம் நிலவிவருகின்றது என்ற அடிப்படையில், மஹிந்த ராஜபக்ச அவர்கள் பாராட்டத்தக்க ஒருவர் தான். ஆனாலும் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட 40,000 இற்கு மேற்பட்ட தமிழ் மக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ என்ன பதில் கூறப்போகின்றார் என்பதும் கேள்விக்குறிதான். இவை இவ்வாறிருக்க, விடுதலைப்புலிகளின் தலைவர் 10 ஆண்டுகள் கழிந்து மீண்டும் வருவார் என்று, பலரும் பல எதிர்பார்ப்புடன் இருப்பதும் வேடிக்கையான ஒ விடயம்தான்.

ஆனாலும் இவ் விடுதலைலப் போராட்டம், இலங்கையில் தோற்றமைக்கான காரணம், விடுதலைப்புலிகளுக்குள் இடம்பெற்ற உட் பூசல்களே, காரணங்களாக அமைந்தன. என்றும், இலங்கையில் தமிழினம் எப்போது கொள்கை ரீதியாக ஒன்று படுகிறதோ, அன்றுதான் தமிழருக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்பதுதான் உண்மை. இதனை தமிழ்த் தேசியத்திற்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வரும் தமிழ் கட்சிகளும், அதன் தலைமைகளும் உணர்ந்து கொண்டால் சரி.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மத்தியில் அதிகாரங்களைக் குவித்து உலகை ஏமாற்றுவது புத்திசாதுரியமானதல்ல.

இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பில் 1987, 1988 ஆம் ஆண்டுகள், மிக முக்கிய ஆண்டுகளாக கருதப்படுகின்றன. ஏனெனில், 1987 இல் இனப்பிரச்சனை தீர்வின், ஓர் ஒளிக்கீற்றாக இலங்கை – இந்திய ஒப்பந்தம் அரங்கேறியதும், 1988 இல் இந்திய அரசின் ஆலோசனையின் பேரில், 13 ஆவது இலங்கை அரசியல் சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட்டமையும், சுட்டிக்காட்டற்பாலது.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின், 13 ஆவது அரசியல் திருத்தச்சட்டமானது, மத்திய அரசின் சில அதிகாரங்களை பரவலாக்கம் செய்து, மாகாணங்களுக்கு வழங்கி, மாகாண மட்டத்தில் முன்கொண்டுசெல்லக்கூடிய வேலைத்திட்டங்களை உறுதிசெய்தது.

ஆனால் அண்மையில், 103 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "திவிநெகும" அதாவது "வாழ்வின் எழுச்சி" சட்டமூலமானது, மாகாணங்களுக்கென வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை, மத்திய அரசுக்கென தாரைவார்க்கும் ஓர் தந்திரோபாய சட்டமூலமாகும்.

இது ஒருபுறமிருக்க, மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கின்ற, இந்தச் சட்டமூலத்தினை நிறைவேற்றுவதற்கு, 09 மாகாண அரசுகளும் ஒப்புதல் அளிக்கும் பட்சத்திலேயே, இதனை நிறைவேற்ற முடியுமென உயர்நீதிமன்றம், இவ்வதிகார குவிப்புக்கு "ஆப்பு வைத்த" காரணத்தினாலேயே, உயர் நீதிமன்ற நீதியரசரை, பதவி நீக்கும் படலம் ஆரம்பமாகி தற்போது மும்முரமாகவே தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இந்தச் சட்டமூலத்தின் மூலம், விவசாய அபிவிருத்தி, பொருளாதார திட்டமிடலும் அதன் செயற்பாடுகளும், மாகாணமட்ட வீதிகள், பாலங்கள் அமைத்தல், புனர்வாழ்வு நடவடிக்கை, கூட்டுறவு விவகாரம் இது போன்ற 15 இற்கும் மேற்பட்ட சட்டஅதிகாரங்களை மையப்படுத்தி, இந்திய மத்திய அரசிற்கும் "தண்ணி காட்டும்" ஓர் நிகழ்ச்சித் திட்டமே இந்த "திவிநெகும" ஆகும்.

அண்மையில் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை ஆதரித்தும், இதன் மூலம் மாகாணங்களுக்கான அதிகாரங்களை பகிர்ந்துகொள்வதே, நாட்டின் அபிவிருத்திக்கான வழிமுறை எனும் நோக்கில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 31 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, அரசிற்கு மசோதா ஒன்றையும் அனுப்பியிருந்தனர். அவர்களுள் பலர் இச் சட்ட மூலத்திற்கு ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர். "ஒரு உறையுள் இரு கத்திகள்" என்பது வரலாற்றில் எதிர்மறையான ஓர் தத்துவமாகும் என்பது உலகறிந்த விடயம். இதுவும் ஓர் சாயம் பூசப்பட்ட ஓர் நாடகம் தான்.

1948 இல் எமது நாடு சுதந்திரமடைந்து விட்டது என கூறப்பட்ட, 65 வருட காலத்திலிருந்து எமது தமிழினம், துன்பதுயரங்களின் உச்சக்கட்டங்களை அனுபவித்துவிட்டனர். இந்நிலையில், எம்மைத் தேடி வந்த ஓர் அன்புக்கரம், அதிகாரப் பரவலாக்கத்தை உள்ளடக்கிய, 13 ஆவது அரசியல் திருத்தச்சட்டம். இதனை மஹிந்த அரசு தற்போது கேள்விக்குறியாக்கிவிட்டது.

இவ்வாறு இலங்கை அரசமைப்பு சட்டத்தின் படி, மாகாண அரசிற்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களை, மத்தியில் குவித்துவைத்து, உலகை ஏமாற்றுவதென்பது, புத்திசாலித்தனமான கைங்கரியமல்ல என்பதை இலங்கை அரசும், அதன் தலைவர்களும், நிச்சயம் புரிந்துகொள்ளவேண்டிய ஓர் விடயமாகும்.

# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

திம்பு - டோக்கியோ வரை

**சென்றவாரத் தொடர்ச்சி.....**

அப்போது நிலவிய அரசியல் சூழல் குறித்து, இங்கு விரிவாக விவாதிக்கப்பட்டது. பரா எனப்படும் இளையதம்பி பரராசசிங்கம், ரவிதாஸ் எனப்படும் முருகதாஸ், தாஸ் எனப்படும் சுந்தரமூர்த்தி போன்றோர், அனைவரும் நிபந்தனைகள் எதுவுமின்றி, புலிகளுடன் இணைய வேண்டுமென புலிகள் வலியுறுத்தினர். ஆனால் ஏனையவர்கள் அதை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கவில்லை. எனினும் புலிகளை இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக எதிர்த்து நிற்பது, அப்போதைய நிலையில் ஈரோசுக்கு சாத்தியமில்லை என்பதையும் உணர்ந்தனர். அத்துடன் புலிகளோடு நிபந்தனையற்ற வகையில், இணைந்து செயற்படுவது என்பது கிழக்கிலும், கொழும்பிலும் இருக்கும் தோழர்களின் பாதுகாப்பினை, கேள்விக்கு உள்ளாக்கும் என்பதை எடுத்துக் கூறினர். இந்நிலையில் ஈரோஸ் இயக்கத்திற்கு மூன்று வழிகள் மட்டுமே காணப்பட்டன.

01.புலிகளுடன் நிபந்தனையின்றி இணைந்து செயற்படுவது அல்லது.

02.புலிகளை இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் எதிர்த்து நிற்பது.

இந்த இரண்டு வழிகளும், நடைமுறைக்கு சாத்தியப்படக்கூடியதாக இருக்கவில்லை. அதனால் 3வது முடிவாக ஈரோஸ் இயக்கத்தை கலைத்து விடுவது எனவும், அதன் சொத்துக்கள் மற்றும் வளங்கள் அனைத்தையும், புலிகளிடம் ஒப்படைப்பது எனவும், உறுப்பினர்கள் தத்தம் சுய விருப்புக்கு ஏற்ப, முடிவு எடுத்து செயற்பட அனுமதிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. இம்முடிவை, ஈரோஸ் இயக்கத்தின் திட்டப் பிரகடன மாநாட்டில், ஈரோஸ் இயக்கத்தின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டிருந்த, பாலகுமாரன் பகிரங்கமாக அறிவித்தார்.



ஆம், 1990ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 15ஆம் திகதி முதல், ஈரோஸ் இயக்கம் தனது அரசியல் இராணுவ செயற்பாடுகள் அனைத்தையும், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிறுத்திக் கொண்டது. அதாவது ஈரோஸ் இயக்கத்துடன் சிறந்த நட்புறவைப் பேணி, சிரித்துச் சிரித்துப் பேசிய படியே, புலிகள் ஈரோசின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

### யாழ் பேச்சு வார்த்தை!

1994இன் ஆகஸ்ட் மாதம் முதல் 1995ஏப்ரல் வரை, இலங்கை அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள். நேரான சந்திப்புக்கள் யாவும், யாழ்ப்பாணத்திலேயே நடைபெற்றது. 1977முதல் ஆட்சியிலிருந்த, ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பதிலாக திருமதி. சந்திரிக்கா தலைமையில், பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்திருந்தது.

மேலும் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, போர்மூலம் இனபிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை, வலியுறுத்தி வந்ததுடன், எந்தவித முன் நிபந்தனையும் இல்லாமல், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும், பகிரங்கமாகவே அறிவித்து இருந்தார். இதனால் இப்பேச்சு வார்த்தைகள் குறித்த எதிர்பார்ப்பு, மிகவும் அதிகமாக இருந்தது. நான்கு தடவைகள் நேரடிச் சந்திப்புக்கள் நடைபெற்றது. சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட கடிதங்கள் பரிமாறப்பட்டிருந்தன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக, பரிமாறப்பட்ட இக்கடிதங்களின் உள்ளடக்கம் குறித்து, இதுவரை பரவலாக எந்தவொரு தரப்பாலும் அறிவிக்கப்படவில்லை. அதாவது பொது மக்களின் அறிவுக்கு புலப்படுத்தப்படாமல், மிக இரகசியமாக இப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அதுவும் வெற்றிகரமாக முன்னேறவில்லை.

1989இல் தமது கணவரான விஜயகுமாரதுங்க, கொலையுண்டதையடுத்து சோசலிச ஐக்கிய முன்னணி (United Socialist Alliance) யின் தலைமைப்பதவி, சிறீலங்கா மக்கள் கட்சியின் தலைமைத்துவம், என்பவற்றை எல்லாம் கைவிட்டு, தமது குழந்தைகளோடு திருமதி. சந்திரிக்கா லண்டனுக்குச் சென்று தங்கியிருந்தார். சுமார் நான்கு ஆண்டு கால அஞ்ஞாதவாசத்தின் பின்னர், 1993மே முதலாம் தேதியன்று, ஜனாதிபதி பிரேமதாச படுகொலை செய்யப்பட்டதையடுத்து திருமதி. சந்திரிக்கா மீண்டும் இலங்கை அரசியலில் பிரவேசித்தார். 1994இல் நடைபெற்ற மாகாண சபை தேர்தல்களிலும், பாராளுமன்ற தேர்தலிலும், தீவிர பங்கு எடுத்தார். போரை நிறுத்துவதும், யுத்தத்தால் சின்னாபின்னமாகிப் போயுள்ள நாட்டை, மீண்டும் கட்டியெழுப்புவதுமே, திருமதி சந்திரிக்கா தலைமையிலான பொது சன ஐக்கிய முன்னணியின் பிரதான இலக்காக இருந்தது.

1994இன் மே மாதத்தில், லண்டனில் வசித்து வந்தவரும், பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுதாபனத்தின் (பி.பி.சி.) சிங்கள மொழிச்சேவையான, சந்தேசியவின் தயாரிப்பாளர்களில் ஒருவருமாக இருந்த திரு.வசந்தராஜா, யாழ்ப்பாணம் சென்று, புலிகளின் தலைமையோடு பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார். இப்பேச்சுவார்த்தைக்கு போவதற்கு முன்பாக வசந்தராஜா, திருமதி சந்திரிக்காவைச் சந்தித்துப் பேசி இருந்தார். அப்போது, ''புலிகளை நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அழைக்க தயாராக இருக்கிறேன்". வடமாகாணத்துடன் கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களையும் இணைத்து, ஒரு தனி அலகை நிறுவத் தயாராக இருக்கிறேன்". எனத் திருமதி, சந்திரிக்கா தெரிவித்து இருந்தார். இது திருமதி, சந்திரிக்கா பாராளுமன்றத் தேர்தல்கள் சுமுகமாக நடைபெறுவதற்காக மேற்கொண்ட, ஒரு முயற்சி என பின்நாளில் தெரியவந்த ஒரு விடயமாகும்.

எனினும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டிலும், வன்னிப்பெருநிலப்பரப்பிலும், 1994ஆம் ஆண்டு தேர்தலை நடத்த, புலிகளின் ஒத்துழைப்பைப் பெற இயலவில்லை. புலிகளைப் பொறுத்தவரையில், தமிழர் தாயகத்தில் இலங்கை அரசு நடத்தும், தேர்தல்கள் யாவும் நீதியற்றவை, ஜனநாயக விரோதமானவை என்ற கருத்துக் காணப்பட்டது. மேலும் யுத்தம் நிறுத்தப்பட்டு, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கண்டு, நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னரேயே, தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்பதில் புலிகள் உறுதியுடன் இருந்தனர்.

1994இன் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்ட, பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது, யாழ்ப்பாணக்குடாநாட்டின் பெரும்பாலான மக்களுக்கு, வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை புலிகள், வழங்கவில்லை. இந்நிலையில் குடா நாட்டின் தேர்தலில் போட்டியிட, தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வரவில்லை. ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தலைமையிலான சுயேச்சைக்குழுவும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல.எப்), புளொட் மற்றும் ஈரோசின் சுதா மாஸ்டர் தலைமையிலான சிலரும் இணைந்து, ஒரு அணியாக யாழ் மாவட்ட தேர்தல் களத்தில் இறங்கின.

படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தீவகத்தில், வாக்குப் பதிவு நடைபெற்றது. இத்தேர்தலின் மூலமாக, யாழ்ப்பாண மாவட்டதிலிருந்து ஒன்பது பாராளுமன்ற ஆசனங்களை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) பெற்றுக் கொண்டது. வன்னி மாவட்டத்தில் இருந்து, புளொட் மூன்று ஆசனங்களைப்பெற்றது. இங்கு புளொட்டுடன் இணைந்து போட்டியிட்ட, கூட்டணியின் அ.தங்கத்துரையும், மட்டகளப்பிலிருந்து யோசப் பராசிங்கமும், பொன்செல்வராசா, துரைராஜசிங்கம் ஆகியோரும் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றனர்.

1994இன் பொதுத் தேர்தலையடுத்து, திருமதி சந்திரிக்கா பண்டார



நாயக்க குமாரதுங்க, பிரதமராகப் பொறுப்பேற்றதும். இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில், புலிகளின் பங்களிப்பைப் பெறுவதை முக்கியமானதாகக் கருதினார். கிழக்கிலிருந்து தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், புலிகளின் பங்களிப்பைப் பெற வேண்டும் என்பதிலேயே அதிகம் அக்கறை காட்டினர். இவ்வேளையில் ஈ.பி.டி.பி, பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு, ஆதரவான அணியாகவே இனங் காணப்பட்டிருந்தது. எனினும், பிரதமர் திருமதி சந்திரிக்கா, ஈ.பி.டி.பி. யினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில், ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாடு பற்றி, முதலாவது சந்திப்பின் போதே அலசி ஆராயப்பட்டது. புலிகள் மீது நம்பிக்கையீனத்தை ஈ.பி.டி.பி.யினர் வெளிப்படுத்தினர். எனினும் பிரதமர் விரும்பி பேச்சுவார்த்தைகள் நடத்த முன் வந்தால், அவரது முயற்சிக்கு தடையாக இருக்கப்போவது இல்லை என்பதையும் தெளிவு படுத்தினர். ஆபிரிக்க தேசிய காங்கிரசின், நெல்சன் மண்டேலாவைப் போல, புலிகளின் தலைவர் பிரபாகரனும், ஒத்துழைக்க முன் வரலாம் என்றே பிரதமர் திருமதி.சந்திரிக்கா நம்பிக்கை கொண்டிருந்தார்.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான, முதலாவது உத்தியோகப்பூர்வ கடிதத்தை, திருமதி சந்திரிக்கா, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின், இலங்கைக் கிளையின் ஊடாக அனுப்பி வைத்தார்.

தொடரும்...

–இரணியன்–

# மூன்றரை ஆண்டுகள் நிறைவில் முள்ளிவாய்க்கால்... ஐ.நாவின் நாடகம் இன்னும் தொடர்கிறது.



அனைத்துலகம் தலையீடு செய்யாமல், வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க, கொடூரங்களும் படுகொலைகளும் அரங்கேறிய ஒரு இடம் மட்டுமல்ல . முள்ளிவாய்க்கால், அனைத்துலக சமூகத்தினரின் செயற்பாடுகள், தாக்குதலாளிகளுக்கு ஊக்கமளித்து உதவியதுடன், சிறிலங்காவிற்குத் தைரியமும் வழங்கியது இந்த முள்ளிவாய்க்கால் விவகாரம் எனலாம்.

சிறிலங்காவினது இனப்போரின் உச்சக்கட்டம்தான், முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற சம்பவங்கள், பொதுமக்களின் உயிர் தொடர்பாக எள்ளளவும் கருத்திலெடுக்காது, தொடுக்கப்பட்ட மூர்க்கமான போர், இங்குதான் அரங்கேறியது. இதன் போது, பெருந்தொகையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதில், எந்தவிதமான ஐயமும் இல்லை. ஆனால் இந்தச் சம்பவங்கள் எந்தப் புறநிலையில் இடம்பெற்றன என்பதை, இதுவரை வெளிவந்த ஊடகச் செய்திகள் எவையும் கொண்டிருக்கவில்லை. இன்று வருந்துதற்குரிய வகையில், முள்ளிவாய்க்கால் என்பது ஓர் அரசியல் கருவியாகவே, பெரிதும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும்.

அத்துடன் அனைத்துத் தரப்பிலுமுள்ள, இனம்சார் தேசியவாதிகள் அனைவரும், தங்களது தீவிரவாதக் கருத்துக்களை விதைத்து, தமக்கான ஆதரவினைத் திரட்டுவதற்கானதொரு மார்க்கமாகவும், முள்ளிவாய்க்கால் பயன்படுத்தப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு வெளிவந்த, இனப்படுகொலை தொடர்பான அறிக்கைகளில், முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட பேரவலத்திற்கான பின்னணி, மற்றும் அதற்குப் பொறுப்பானவர்கள் தொடர்பான தகவல்கள், மிக அரிதாகவே காணப்பட்டன. இடம்பெற்ற இந்தப் பெரும் துயரத்திற்கு, விடுதலைப் புலிகள் மீதுதான் குற்றம் சுமத்துகின்றது சிறிலங்கா அரசு.

உண்மையும் நியாயமும் ஒருபோதும் சாவதில்லை. உண்மைகள் என்றும் நிலைக்கும். என 1810 ஆம் ஆண்டு, தோமஸ் ஜோன்சன் என்பவர் வணக்கத்துக்குரிய சாமுவேல் கொனேக்சிற்கு எழுதியிருந்தார். வன்னியில் முள்ளிவாய்க்கால் என்ற கிராமம், சிறிலங்கா அரச படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் இருந்தது. இந்தக் கிராமத்தில் மக்கள் செறிவாகக் காணப்படுகிறார்கள் என்பதை, மறந்து சிறிலங்கா இராணுவத்தினர், விடுதலைப் புலிகள் மீது, மூர்க்கமுடன் போர் தொடுத்தமைதான் இந்தப் படுகொலைக்கான பிரதான காரணம்.

அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்புக்கு, உத்தரவாதமளிப்பதாக உறுதியளித்த சிறிலங்கா அரச படையினர், பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகள் மீதும், வகைதொகையற்ற தாக்குதல்களை நடாத்தும் வகையில், பலப் பிரயோகத்தினை மேற்கொண்டிருந்தனர். இந்தக் காலப்பகுதியில், ஐ.நா நடுநிலையுடன் கூடியதொரு நிலைப்பாட்டினையே கொண்டிருந்தது. இங்கு நடு நிலையுடன் கூடியதொரு நிலைப்பாடு எனும்போது, நடைமுறையில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்கள் என பெருந்தொகையான பொதுமக்கள் மூர்க்கத்தனமாகக் கொல்லப்பட்டபோதும், ஐ.நா எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாததொரு போர்க்குற்றத்தைப் புரிந்துள்ளது வேதனைக்குரியதுவே.

இந்தப் போரின் ஒவ்வொரு நாட்களும், அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான, மிகவும் மோசமாக வெளியே சொல்லமுடியாத, கொடூரங்களைக் கொண்டிருந்தது. சிறிய நிலப்பரப்பினுள் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியில், நித்திரையின்றி விரக்தியுடன் இருந்த ஆயுதம் தரிக்காத ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள், மரண பயத்துடனும் நிர்க்கதியாகவும் இருந்தனர்.

அனைத்துலகம் எதுவித தலையீடும் செய்யாமல், வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க தொடர்ச்சியான கொடூரங்கள் அரங்கேறிய ஒரு இடம் மட்டுமல்ல முள்ளிவாய்க்கால், அனைத்துலக சமூகத்தின் செயற்பாடுகள் தாக்குதலாளிகளுக்கு ஊக்கமளித்து உதவியதுடன், சிறிலங்காவிற்குத் தைரியமும் வழங்கியது எனலாம். முள்ளிவாய்க்கால் தோல்வி என்பது நடந்திருக்கவே தேவையில்லை.



ஆயிரக்கணக்கான எலும்புக்கூடுகள் வடகிழக்குக் கரையோரத்தில் சிதறியிருக்கவும் தேவையில்லை. ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தமது தந்தை, தாய், சகோதரர்கள் சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்ட கதையைக்கூறி, வளர்க்கப்படவேண்டிய தேவையுமில்லை.

### எத்தனை பேர் இங்கு கொல்லப்பட்டார்கள்?

போரின்போது காயமடைந்த, மற்றும் கொல்லப்பட்ட பொதுமக்கள், எத்தனைபேர் என்பது தொடர்பில் பல்வேறுபட்ட கணக்குகள் வெளிவருகின்றன. 10,000 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தார்கள் என ஒரு தரப்பினரும், கொல்லப்பட்டவர்களின் தொகை 40,000 என இன்னோர் தரப்பினரும், 100,000 இற்கும் மேலிருக்ம் என பிறிதொரு தரப்பினரும் கூறுகிறார்கள்.

தொடர்ந்து இந்தப் போரில் காணாமற்போனவர்களது தொகையும், மேற்குறித்த இந்த இறந்தவர்களது தொகையில் இணைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது உலகப்போருக்குப் பின்னான இந்த யுத்தத்தில், மிகவும் மோசமான குறுகிய நிலப்பகுதியில் வைத்து, அதிகளவானோர் கொல்லப்பட்ட சம்பவம் இது. முள்ளிவாய்க்கால் முற்றுகையின் போது ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் என ஆயிரக்கணக்கான பொதுமக்கள், படுகொலை செய்யப்பட்டனர் என்பதில், எந்தவிதமான குழப்பமும் கிடையாது. சிறிலங்கா இராணுவத்தினரால், முள்ளிவாய்க்கால் முற்றுகை இறுகியபோதுதான், இவர்களில் பலர் வகைதொகையின்றிக் கொல்லப்பட்னர். மே 18, 2009 ற்குப் பின்னர்தான், இந்த முற்றுகையிலிருந்து குறிப்பிட்டுக் கூறக்கூடிய தொகையினர் வெளியேறினர்

முள்ளிவாய்க்கால் வீழ்ச்சி கண்டு மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தப் பிரச்சினை தொடர்பாக, எண்ணற்ற விடயங்கள் ஏலவே எழுதப்பட்டுவிட்டன. ஆனால் இவ்வாறு வெளிவந்த அறிக்கைகளில், பெரும்பான்மையானவை, ஊடகத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையே. இதுவிடயம் தொடர்பான ஆழமான ஆய்வுகள் மிகக் குறைவாகவே வெளிவந்திருக்கின்றன. இக்கொலைகள் மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் என்பவற்றுடன் மாத்திரம், முள்ளிவாய்க்கால் தொடர்பான கலந்துரையாடல்கள் மட்டுப்படுத்தப்பட்டுவிடக்கூடாது.

இந்த மனிதப் படுகொலைக்கு வழிவகுத்த, உண்மையான காரணங்களை, விளங்கிக்கொள்ளும் வகையில், இடம்பெற்றுவிட்ட சம்பவங்களின் புறநிலைகளையும் கவனத்திலெடுக்கும்வகையில், இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஆழமான அவதானத்துடன் கூடிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானது. சிறிலங்காவில் தொடர்ந்த, 25 ஆண்டுகாலப் போரில், அரச பயங்கரவாதத்தின் உதாரணம்தான் முள்ளிவாய்க்காலா? பதிலளிக்கப்பட்ட வேண்டிய முக்கிய கேள்வியிதுதான்.

### யார்தான் பொறுப்பு?

கரையோரத்தினைக் கொண்ட முள்ளிவாய்க்கால், வெட்டை வெளியான நிலப்பரப்பினைக் கொண்டது. இதுபோன்ற தரைத்தோற்றம், வலிந்து தாக்குதலில் ஈடுபடும் படையினருக்கு மிகச் சிறந்த அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கவல்லது. இந்தியத் தேர்தல் முடிவுறும் வரைக்கும், தனது இறுதிக்கட்டத் தாக்குதலை நடத்தாது, சிறிலங்காப் படையினர் காத்திருந்தார்கள். இந்தக் காலப்பகுதியில் இரண்டு தரப்பினருக்கும் கிடைக்கப்பெற்ற வளங்களை, அடிப்படையாகக் கொண்டு தரைத்தோற்றத் தன்மையினையும் கருத்திலெடுத்து, போர் இடம்பெற்ற பகுதியில் பொதுமக்களும் இருக்கிறார்கள் என்பதை நினைவிற்கொண்டு, தன்னைத் தற்காத்துக்கொள்ளக்கூடிய பலத்தினையும், வழிவகைகளையும் சிறிலங்கா அரச படையினர் கொண்டிருந்தார்கள்.

சிறிலங்கா அரசபடையினர், படைத்துறை அனுகூலங்களைக் கொண்டிருந்த புறநிலையில், முள்ளிவாய்க்கால் முற்றுகையின்போது, அப்பாவி ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களிடத்தில், சிறிலங்கா இராணுவத்தினர் காட்டிய அவமதிப்பினை, எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. பொதுமக்களின் இராணுவ எதிர்ப்புகள் எதுவுமற்ற நிலையில், இவர்களை இலக்குவைத்து முழு அளவிலான போரை அரச படையினர் தொடுத்தனர். பெருந்தொகையான பொது மக்களின் இழப்புக்கள் உண்மையில் தவிர்ந்திருக்கக்கூடியதே. மோதல்களில் நடுவே சிக்குண்டு பாதிக்கப்பட்ட இந்த மக்களிடம் கூறுவதற்கு, ஏராளமான கதைகள் உள்ளன. இந்த முற்றுகையிலிருந்து தப்பிப்பிழைத்த 300000 பொதுமக்கள் தங்களது துயரக் கதைகளைப் பகிர்ந்துகொள்வதற்குத் தயாராகவே இருக்கிறார்கள். இந்த



மக்களின் கதைகளைக் காதுகொடுத்துக் கேட்பதற்கு, இன்று எவரும் தயாராக இல்லை. முள்ளிவாய்க்காலில் இந்த மக்கள் சந்தித்த, கடும் கொடூரம் நிறைந்த கதைகள், இன்னமும் வெளியே சொல்லப்படவில்லை தான், ஏனெனில் அது கலாச்சாரத்தையும் மிஞ்சிய கொடூரமான கதைதான்.

இந்தப் படுகொலைக்கான பொறுப்பினை அனைத்துலக சமூகமுமே தாங்கிக்கொள்ளவேண்டும். ஐ.நா தனது அதிகாரத்தினைப் பயன்படுத்தியிருந்தால், இந்தப் பெரும் மனிதப் படுகொலைகளை உலகம் நிச்சயம் தடுத்திருக்கும் ஆனால் ஐ.நா கைகட்டி வேடிக்கை பார்த்தது வேதனை தரும் விடயமாகும்..

### படுகொலைகளின் பின்னர்.

இறந்தவர்களின் உடல்களை அடையாளப்படுத்தும் வகையிலும், அவற்றை முறையாக அடக்கம் செய்யும் வகையிலும், முள்ளிவாய்க்காலில் பெரும் மனிதப் படுகொலைகள் இடம்பெற்ற இடங்களில், முறையான விசாரணைகள் எதுவும் இதுவரை அரசினால் முன்னெடுக்கப்படவில்லை. சிறிலங்கா இராணுவத்தினரைத் தவிர, அங்கு வேறு எவரும் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இது படுகொலையின் எச்சங்களை படையினரே துப்பரவுசெய்வதற்கு வழிசெய்திருக்கிறது. இறந்த உடல்களை இராணுவத்தினர் என்ன செய்தார்கள் என்பது, இன்னமும் தெரியவில்லை?

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு, ஒன்றிணைந்த நினைவாலயம் அல்லது அவர்கள் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்ட இடம் எதுவும் இருக்கிறதா? முள்ளிவாய்க்காலில் இறந்துபோன ஆயிரமாயிரம் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களை, இந்தப் பேரவலத்திலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள், மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக்கொண்டே இருப்பார்கள். இவர்களின் நினைவுகளை, அனைத்துலக ரீதியில் எடுத்துச்செல்லும் இந்த மக்கள், உண்மை வெளிவரும் வரைக்கும் பொறுமையுடன் காத்திருக்கிறார்கள்.

காணாமற்போன ஆண்களதும், பெண்களதும், சிறுவர்களதும் விதி என்ன என்பதை, வெளிப்படுத்தும் வகையில், முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக்கோரி, மே 2009 இல் போர் முடிவுக்கு வந்தது. முதல், புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழர்கள், தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1. இந்தப் படுகொலையின் முழுமையான விபரங்கள் அனைத்தும் சிறிலங்கா, அரசால் வெளியிடப்படவேண்டும், அல்லது வெளிப்படுத்தப்படவேண்டும்.

தொடரும்...

– நெற்றிப்பொறியன் –

# பேசப்போன செழியன் பேரின்பநாயகத்தைச் சுட்டுக்கொன்ற புலிகள்.

சென்றவாரத்தொடர்ச்சி...

நான் தப்புவதற்காக, "தமிழ்நெற்" தலைமையகத்தின் மீதே பழியைப் போட்டேன். "தமிழ்நெற்" இணையத்தளத்திற்கு நான் செய்தியாளராக இருப்பது உண்மைதான். ஆனால் மட்டக்களப்பில், "தமிழ்நெற்" இணையத்தளத்திற்கு, பலர் செய்தியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இந்த செய்தியை அனுப்பியிருக்கலாம். மட்டக்களப்பிலோ, அல்லது வேறு மாவட்டங்களிலோ, "தமிழ்நெற்"இணையத்தளத்திற்கு, யார் யார் செய்தியாளராக இருக்கிறார்கள் என்ற விபரம், எனக்குத் தெரியாது என நான் சொன்னேன்.

"அண்ணை, இந்த செய்தியை யார் எழுதியது என்று கண்டுபிடிக்கவேண்டும். யார் எழுதியது என, ஒரு கிழமைக்குள் எனக்கு கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்" என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டேன். அதன் பின்னர் லேக் வீதியில் உள்ள, ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகத்திற்கு முன்னால் நின்றிருந்த ராஜிக்கை தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. ராஜிக் கேட்ட முதல் கேள்வி, அண்ணை ஆளைக் கண்டுபிடிச்சிட்டீங்களா என்பதுதான். நானும் விசாரித்துக் கொண்டுதானிருகிறேன். எப்படியும் கண்டுபிடித்துச் சொல்கிறேன். எனச் சொல்லி, ஒருவாறு அங்கிருந்து சென்றுவிட்டேன்.

ராஜிக் மீது தற்கொலைத் தாக்குதல்.

என்னுடைய நல்ல காலமோ தெரியவில்லை. சில நாட்கள் கழித்து, 29 மே, 1999 நண்பகல் வேளை, மட்டக்களப்பு நகரிலுள்ள இளைஞர் சேவை அலுவலகத்தில், பத்திரிகையாளர்களுக்கான ஒரு சந்திப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவ்வேளையில் பாரிய குண்டுச்சத்தம் கேட்டது. குண்டு சத்தம் கேட்ட திசையில் இருக்கும், தயா மோட்டரஸ் என்ற கடைக்கு தொலைபேசி எடுத்து விசாரித்தோம். எங்கள் கடைக்குப் பக்கத்தில் தான் குண்டு வெடிச்சிருக்கு, எனச் சொல்லிவிட்டு அவர் தொலைபேசியை துண்டித்துவிட்டார். பொதுவாகவே குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தால், அந்த இடத்தை விட்டு மக்கள் வேறு இடத்திற்கு ஓடிச்செல்வார்கள். ஆனால் பத்திரிகையாளர்கள், குண்டுவெடிப்பு நடந்த இடத்தை நோக்கி, ஓடிச்செல்வார்கள். அன்றும் குண்டுவெடிப்பு நடந்த இடத்தை நோக்கியே மோட்டார் சைக்கிளில் விரைந்து சென்றோம். பொலிசார், இராணுவத்தினர் அந்த இடத்திற்கு வருவதற்கு முதல் சென்றது நாங்கள் தான். அந்த இடத்தில் வேறுயாரும் இருக்கவில்லை.

சற்று நேரத்திலத் தான் இராணுவத்தினரும் பொலிசாரும் அங்கு வந்து சேர்ந்தனர். மோட்டார் சைக்கிள் ஒன்றின் அருகில், மூவரின் சடலங்கள், இன்னும் சிலர் காயமடைந்திருந்தனர். சற்றுத் தள்ளி ஒருவரின் தலை, அருகில்ச் சென்று பார்த்தோம். கொல்லப்பட்டவர்களில் ஒருவர், மட்டக்களப்பில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வந்த, ராஜிக் குழுவினரின் தலைவர் ராஜிக்.

அது ஒரு தற்கொலைத் தாக்குதல், மட்டக்களப்பில் நடந்த இரண்டாவது தற்கொலைத்தாக்குதல் இதுவாகும். அந்தச் சம்பவம் நடந்து ஒரு மணிநேரத்திற்குள், தமிழ்நெற்றில் செய்தி வெளியானது. இலங்கையிலுள்ள எந்த ஊடகமும் செய்தியை வெளியிடுவதற்கு முதல், ராஜிக் கொல்லப்பட்ட செய்தியை, "தமிழ்நெற்" தான் உடனடியாக வெளியிட்டது. கொலைகளை யாரும் ஏற்றுக்கொள்ளமுடியாது. நியாயப்படுத்தவும் முடியாது. ஆனால் ராஜிக் கொல்லப்பட்ட பின்னர், சிக்கலுக்குரிய ஒரு கேள்விக்கு பதிலளிக்க வேண்டிய நெருக்கடியிரிருந்து நான் தப்பிக்கொண்டேன்.

1990 களின் பின்னர், மட்டக்களப்பில் குண்டுவெடிப்பில் சிதறிக்கிடக்கும் சடலங்களையும், டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலங்ளையும், பார்த்துப் பார்த்து, இக்காட்சிகள் எமக்கு புதிதாகத் தெரிவதில்லை. மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான மக்கள், ராஜிக் கொல்லப்பட்டதை மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொண்டனர். ஏனெனில் மட்டக்களப்பில் இந்திய இராணுவகாலத்தில், மண்டையன் குழுவுக்கு தலைமை தாங்கியது முதல், அதன் பின்னர் 1991 ஆம் ஆண்டுகளின் பின்னர், சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து, ராஜிக் குழு என்ற பெயரிலும் செய்த அட்டகாசங்கள் கொலைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

சிங்கள இராணுவத்தை, எப்படி மட்டக்களப்புத் தமிழ் மக்கள் வெறுத்தார்களோ, அதேபோன்று ஈ.பி.ஆர்.எல்.எப் ராஜிக், புளொட் மோகன் போன்றவர்களையும் வெறுத்தார்கள். பொது மக்களைப் படுகொலை செய்து, விடுதலை வழங்கி, விண்ணுலகம் அனுப்புவதில், அனைத்து இயக்கங்களுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்தவர்கள் அல்ல. பொதுவாகவே ஆரம்பகாலத்தில், தமிழ் இயக்கங்களில் ஈரோஸ் இயக்கம், படுகொலைகள் அட்டகாசம் புரியாதவர்கள் என்ற நல்ல அபிப்பிராயம் நிலவி வந்தது. ஆரம்பகாலத்தில், அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களுடன், சில தொடர்புகளும் எனக்கு இருந்தது. அந்நாட்களில் மட்டக்களப்பில், ஈரோஸ் இயக்கத்தின் முக்கியஸ்தர்களாக இருந்த பஷீர், அதன் பின்னர் பாலகுமார் வரை, அந்த இயக்கத்தை சேர்ந்த சிலர், எனது நல்ல நண்பர்களாக இருந்தனர். நான் இலங்கையில் இருக்கும் வரை அவர்களுடனான நட்பு தொடர்ந்தது.

முற்றும்.

சுவிசிலிருந்து இரா.துரைரெத்தினம்.

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் தடுப்பு சட்ட விரோதமானதே.



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ், குற்றம் புரியாத அப்பாவித் தமிழர்கள் பலர், தண்டனை அனுபவித்து இருக்கிறார்கள் என்பதை, முன்னர் ஒரு தடவை பார்த்திருக்கிறோம். போர் நடந்த காலத்தில், பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என குற்றம் சாட்டப்பட்ட பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். சிறைத்தண்டனையை அனுபவித்தார்கள். போர் முடிந்த நிலையில், அரசாங்கம் பயங்கரவாதிகள் எனக் கூறிய விடுதலைப்புலிகளும், முற்றாக அழிக்கப்பட்டு மூன்றரை வருடங்களாகிறது.

இப்பொழுது மீண்டும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என இதுவரை 40 மாணவர்கள்வரைக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வடக்கே கைதுசெய்யப்பட வேண்டியய நபர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்களையும் கைது செய்ய வேண்டும் என, சிறிலங்கா காவல்துறை ஊடகப் பேச்சாளர், பிரிஷாந்த் ஜயக்கொடி தெரிவித்துள்ளார். எனவே கைது செய்யும் நடவடிக்கைகள் மட்டும் இன்றும் நீண்டு செல்லப்போகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்றும், நீண்டகாலமாக சேகரித்துவந்த புலனாய்வுத் தகவல்களின்படியே, இவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், பிரிஷாந்த் ஜயக்கொடி தெரிவித்தார். இலங்கை இராணுவத்திடம் சரணடையாமல், மறைந்து வாழ்ந்த இவர்கள் தொடர்பில், தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும், அதன்பின்னர் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

போரின் போது, முள்ளிவாய்க்காலிலிருந்து, இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த எவரும், இராணுவத்தினரிடம் சரணடையாமல், தப்பி வருவதற்கான எந்த வழிகளும் அப்போது காணப்படவில்லை. சரணடைந்த பின்னர், கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டவர்களே, இப்போது கைது செய்யப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர், ஏற்கனவே இராணுவத்தினரால் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர், விடுவிக்கப்பட்டவர்கள். எனவே படைத்தரப்பினர் கூறுவது போல, முள்ளிவாய்க்காலிலிருந்து வெளியேறிய பின்னர், இராணுவத்திடம் சரணடையாமல் மறைந்து வாழ்ந்தார்கள் என்பது நம்பகத்தன்மையற்ற செய்திக் கூற்றாகும்.

கைது செய்யப்பட்டவர்களில், மாணவர் ஒருவரும், மூன்று பெண்களும் அடங்குகின்றனர். கைது செய்யப்பட்ட மாணவன் 18 வயதுடையவர் எனவும் கூறப்படுகிறது. அவர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர், என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே, கைது செய்யப்பட்டிருக்கிறார். முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

2009 ஆம் ஆண்டில், விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில், இந்த மாணவனுக்கு 14 வயது மட்டுமே. அத்துடன் அம்மாணவன் போர் நடந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திலேயே வாழ்ந்து வந்தார் என அவரின் பெற்றோர் தெரவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, இம்மாணவன் எப்படி இல்லாத விடுதலைப்புலிகளுடன் தொடர்பைப் பேணியிருக்க முடியும். கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், வெலிகந்தை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, சட்டத்திற்கு முரணானது என சட்டவல்லுனர்கள் கூறுகின்றனர். வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாம் என்பது உண்மையில், கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளுக்கு, வழங்கப்படும் தண்டனையை ஒத்த, மோசமானது என, அங்கிருந்து விடுதலையானவர்களின் வாக்குமூலகத்தின்மூலம் அறிய முடிகிறது. காலையில் 4 மணிக்கு எழுந்து, காலைக்கடன்களை, அவசர அவசரமாக முடித்த பின், அவர்கள் பண்ணைகளுக்கு அழைத்து சொல்லப்படுவார்கள். எருமைமாடுகளுக்கு குளிப்பாட்டுவது, எருமைப்பாபாட்டு பண்ணைகளைப் துப்பரவு செய்வது. தோட்டவேலை, மரம் வெட்டுதல் போன்ற கடினமான வேலைகளை நாள் முழுவதும் செய்த பின், மாலை மீண்டும் அவர்கள் முகாமுக்குக் கொண்டு வந்து, அவர்களை அடைத்து வைப்பதற்கு பெயரே புனர்வாழ்வு ஆகும்.

கைது செய்தவர்கள் ஒருபோதும், தண்டனை வழங்க முடியாது. ஆள் ஒருவர் கைது செய்யப்பட்டால், அவர் மீது உள்ள குற்றச்சாட்டுகளை, நீதிமன்றில் சமர்ப்பித்து, வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யும் அதிகாரம் மாத்திரம், பொலிஸாருக்கு உள்ளதே தவிர, தண்டனை வழங்கும் அதிகாரம் அல்லது தீர்ப்பு வழங்கும் அதிகாரம், படைத்தரப்புக்குக் கிடையாது. இதுவே இலங்கைச் சட்ட அமைப்பு.

நாட்டில் நடைமுறையிலிருந்த, அவரசகாலத் சட்டம் நீக்கப்பட்டுள்ள போதிலும், அதிலுள்ள முக்கிய சில ஷரத்துகள், சட்டபூர்மற்ற முறையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குள் புகுத்தப்பட்டுள்ளன. போர் முடிவடைந்த பின்னர், **அவசரகால சட்டத்தை நீக்க வேண்டிய நெருக்கடியில்**, அரசாங்கம் இருந்தது.

அவசரகால சட்டத்தை நீக்கிய போது, பயங்கரவாத தடைச்சட்டத்தில், புதிய சரத்து ஒன்று புகுத்தப்பட்டது. பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டு, இராணுவத்தில் சரணடைபவர்கள், புனர்வாழ்வு முகாம்களில் வைத்து, **புனர்வாழ்வு அளித்த** பின், அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பது, புதிதாகச் சேர்க்கப்பட்ட விதிகளில் ஒன்றாகும.

ஒருவரைக் கைதுசெய்து, அவரிடம் பலவந்தமாக ஆவணத்தில் கையொப்பம் பெற்று, சரணடைந்தவர் எனக் கூறி, புனர்வாழ்வு என்ற பெயரில், புனர்வாழ்வு முகாமுக்கு மாற்ற, இந்த ஒழுங்கு விதிகள் வழிவகுக்கின்றன.

எனினும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், புதிதாகச் சேர்க்கப்பட்ட இவ்விதிகள் சட்டத்திற்கு முரணானது என, சட்டவல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். தீர்ப்பு வழங்கும் அதிகாரம், அல்லது தண்டனை வழங்கும் அதிகாரம், நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது. பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ், புதிதாக சேர்க்கப்பட்ட இந்த விதிகள், நீதிமன்றத்தின் அதிகாரங்களை, சட்டவிரோதமாக கையில் எடுக்கும் நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தச் சட்டத்தின் கீழ், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது, சட்டவிரோதமானது என்றே சுட்டிக்காட்டப்படுகிறது.

பயங்கரவாத செயலில், ஈடுபட்டு, இராணுவத்தினரிடம் சரணடைந்து, அவர்களின் சுயவிருப்பின் பேரிலேயே, புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்ப முடியும். ஆனால் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், பயங்கரவாத செயல்களில் ஈடுபடவும் இல்லை.

இராணுவத்தினரிடம் சரணடையவும் இல்லை. சில வேளைகளில் படையினரின் வற்புறுத்தல் காரணமாக அவர்கள் கையொப்பம் இட்டிருக்கக்கூடும். அவ்வாறு சம்மதம் தெரிவித்தாலும், அவர்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம், கைது செய்த படையினருக்கு கிடையாது. என்பதையே எமது அரசமைப்புச் சட்டம் கூறுகின்றது.

- சுவிசிலிருந்து இரா.துரைரெத்தினம் -

# கூட்டமைப்புடனான பேச்சு வார்த்தையும் சிங்களத் தலைமைகளின் போக்கும்

16-12-2012 இன் தொடர்ச்சி...

அரசியல் விடுதலையின் கருத்தியல்சார் போக்குகள், இந்த இடத்தில் கூட்டமைப்பைப் பற்றிய, வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால், தமிழ்மக்கள் ஏன் ஒரு தெளிவான பாதையில், சரியான நிலைப்பாட்டில், பயணிக்க முடியவில்லை, என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. நாம் யூத இனத்தின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும், எனக் கருதினாலும், யூத இனத்தின் அடிப்படைப் பண்பியல்புகள் எம்மிடம் இருக்கின்றதா? அப்படியாயின் அதை வளர்த்துக் கொள்ள முனைகின்றோமோ? என்றால், ஆம் என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. யூதர்கள் விடுதலைக்கான அடிப்படைகளான சமூக, பொருளாதார, அரசியல் தளத்தை, புலம்பெயர் தேசத்தில் கட்டியெழுப்பி, மக்களை ஒருங்கிணைந்து, கொஞ்சம் கொஞ்சமாக தளத்தை உருவாக்கி, உழைத்தார்கள். தெளிவான பாதையை, பல்வேறு தளங்களில், திசைகளில் வகுத்தார்கள். தனித்தனியாக இலக்கை நோக்கிப் பயணித்தார்கள். தன்னம்பிக்கையும் திடமும் அவர்களிடம் இருந்தது. உறுதியாக நம்பி, அதை முன்னகர்த்தி வெற்றியும் பெற்றார்கள்.

யூதர்களின் போராட்டத்திற்கான, சர்வதேச புவியியல் நிலைமைகள், வேறு வகையில் இருந்தன. ஈழத்தமிழர்களுக்கு அப்படியில்லை, என்ற விவாதத்தை விடுத்து, இருக்கும் சூழலையும், தேவைப்படுமிடத்து, உருவாக்கவேண்டிய சூழல்களையும், நாமே உருவாக்கி உழைக்க வேண்டும். மாறாக வாய்ப்பான சூழல் வருமென்று காத்திருக்கலாம் என்பது ''இலவு காத்த கிளி மாதிரி" போய்விடும். சிங்களத்தின் அரசியல் நகர்வுகளை எதிர்கொள்ளும், தமிழ்மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை, முன்நகர்த்தும் தலைமைகளிடம், மற்றும் அரசியல் பற்றி பேசுபவர்களிடம் இருக்கும் மனப்போக்கின் தன்மையே, தற்போதைய மீள் எழுகையின் தடைக்காரணிகளாக இருக்கின்றன. எவ்வகையான மனபோக்கு, குறிப்பாக முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர், ஏற்பட்டிருக்கின்றது, என நோக்குவோமாயின்,

* இணக்க நிலை மனப் பாங்கில், தமிழ் மக்களின் இனவிடுதலை பற்றிய, பேரினவாத சிந்தனையை தத்துவார்த்தமாக மறுவாசிப்பு செய்யும் மனப்போக்கு.

* ஒரு முனைப்படாமல் உள முரண்பாடுகளில் அதிகமான வலுவையும், வளத்தையும் செலவழிக்கும் ஒரு மனப்போக்கு.

* தோல்வி மனப்பான்மையில், ச ரணாகதி அடைந்து, அரசுடன் இணைந்து போய், தருவதைவாங்குவோம் என்ற கருத்தியல் அடித்தளத்தில், செயற்படும் மனப்போக்கு.

* தமிழ் மக்கள், தங்களின் அரசியல் அபிலாஷையைத் தெளிவாகக் கொண்டிருந்தாலும். பரந்தளவிலான செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய, மூலோபாயங்களைக் கொண்டிராத தன்மையும், ஒற்றுமையின்மையும் கொண்ட மனப்போக்கு.

* புலி எதிர்ப்பு என்ற ஒரே மனநிலையில், தமிழ்த்தேசிய விடுதலைக்கான போராட்டத்தையும், அரசியல் முன்னெடுப்புக்களையும் 'குதர்க்கம்' பண்ணும் மனப்போக்கு.

* விடுதலை நிகழ்வுகளும், சிறு சிறு முன்அடைவுகளும், கருத்தியல் ரீதியாக மக்களை ஒன்றாக்கி வைத்திருக்க மிக அவசியமானவை. ஆனால் அதை மட்டுமே பாரிய அரசியல் அடைவுகளாகக் கருதி, திருப்தியடையும் மனப்போக்கு. இவ்வாறான உள வியல் சார் நடத்தைகளே, தொடர்ந்தும் வேகமாக நகர முடியாத நிலையை, மக்கள் மத்தியில் வைத்திருக்கின்றன. அரசுடன் இணைந்திருப்பவர்களையும், அவர்களது கொள்கைக்கு சார்பாக, தனது வாழ்வரசியலை நடாத்துகின்றவர்களையும், அரசுடன் சேர்த்துக் கையாளலாம். ஆனால் ஈழத்தமிழ் மக்களுடன் இருந்து கொண்டு, தம்மை அரசியல் மேதாவிகள் போல நினைத்து, இணக்க நிலை, அல்லது சரணாகதி அரசியல் மனநிலையில் நின்று செயற்படுவார்கள், இவற்றை நம்புகின்றவர்களின் கருத்துக்கள், சாணக்கியமாகவும், புலமைச்சார்ந்ததாகவும், இருக்கலாம். ஆனால்அவர்களின் கருத்துக்கள், மெல்ல மெல்ல நச்சூட்டுவது போன்ற, வீச்சுக்கொடுக்காது, பலவீனப்படுத்திக் கொண்டிருக்கும். வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதைப்போல ஈழத் தமிழர்களின் அரசியல் முனைப்புக்களைச் சிதைத்து விடும்.

மாற்றமடையாத சிங்களஅரசின் மனப்பாங்கை, வெற்றிகொள்ளக்கூடிய வகையில், தமிழ் மக்களின் மனப்பாங்கை மேம்படுத்தல் வேண்டும், ஒழுங்குபடுத்தல் வேண்டும். குழப்பதுடன் நம்பிக்கையற்று இருப்போருக்கு, தமிழ் மக்களின் அடிப்படைப் பண்பியல் ஒளியைப் பாச்சி, புதுப்பித்து, சரியான திசையில் கொண்டு செல்லவேண்டும். இதுவே தோல்வி, சரணாகதி மனநிலையில் இருந்தும், குதர்க்கவாத மனநிலையில் இருந்தும், விடுபட்டு, எதிர்நீச்சல் போடக்கூடிய மனவலிமையுடன், நகர்வதற்குரிய ஆற்றலையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கும்.

எனது கட்டுரை ஒன்றுக்கான பின்னூட்டத்தில், நாங்கள் யூதர்களைப்போல இல்லாவிட்டாலும் பரவாயில்லை. குறைந்தது சிங்களத்தலைமைகள் போல ஒற்றுமையாக இருந்தாலே, அரசியல் விடுதலை சாத்தியம் என தெரிவிக்கப்பட்டிருந்தது தான் நினைவுக்கு வருகிறது. ஏனெனில் சிங்கள அரசியல் தலைமைகள், அரசியலில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், சிங்களத் தேசியவாதம் அல்லது, தமிழ் தேசியத்திற்கான எதிர் நடவடிக்கை என்று வரும்போது, ஒன்றாகக் கைக்கோர்ப்பார்கள். சரி பிழை என்ற உள்விவாதங்களுக்கு அப்பால், சிங்கள தேசியவாதச் சிந்தனையில் ஒன்றாக, உறுதியாக நிற்பார்கள். சுயவிமர்சனம் தேவை என்ற பெயரில், இனத்தைச் சிறுமைப்படுத்தும், அரசியல் முயற்சிகளை சீரழிக்கும் செயற்பாடுகளைச் செய்ய மாட்டார்கள். வரலாற்றுச் சான்றுகளை மீட்கும் போது, இத்தத்துவம் புலனாகும்.

எனவே தமிழ் மக்கள் தங்கள், அரசியல் மனோபலத்தின் திடத்தன்மையை, மழுங்கடிக்கும் செயற்பாடுகளைச் செய்யாமல், முடிந்தவரை உண்மையான, நேர்மையான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். உண்மையான அரசியல் என்பதன் விளக்கம், உன்னதமான தியாகங்களின் உண்மைத்தன்மையையும், அவர்களின் சிந்தனையையும், விடுதலைப் போராட்டத்தில் அரசியல் வரலாற்றையும் மழுங்கடிக்காத, அவற்றை வலுப்படுத்த கூடியதாக இருப்பது அவசியமாகின்றது.

இறுதியாக, கொள்கையளவில் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளைப்பற்றிப் பேசினாலும், தற்போது கூட்டமைப்பு பங்கு கொள்ளும் பேச்சு வார்த்தை, அரசியல் அடிப்படைகளை நிலை நிறுத்துவதற்கான பேச்சு வார்த்தையாகக் கருத இயலாது. மாறாக இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு அமைவாக, ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, தமிழர்களுக்கான அதிகாரங்களை வழங்குமாறு கோரும் பேச்சு வார்த்தை என்றே கருதவேண்டும். எனவே இந்தப் பேச்சு வார்த்தையைப் பெரிது படுத்தி, தமிழ் மக்களுக்குத் திருப்தியைக் கொடுக்க முடியாது. வேண்டுமானால் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அரசியல் திருத்தச் சட்டத்தைக்கூட ஸ்ரீலங்கா அரசு வழங்குவது தொடர்பில், எவ்வாறு செயற்படுகிறது என்பதனூடாக, தமிழ் மக்களின், அரசு மீதான நம்பிக்கையற்ற போக்கின் அடிப்படைக்காரணத்தை, மீண்டும் ஒருமுறை புரியவைப்பதற்காக பயன்படலாம்.

தமிழ் மக்களின் அரசியல் அபி லாசைகளை, உள்ளடக்கிய அரசியல் தீர்வை, சிங்களத் தலைமைகள் இலகுவாகத் தந்துவிடப்போவதில்லை. எனவே இழுத்தடிப்புக்கள் எமது தாயகக் கோட்பாட்டை வலுவிழக்கச் செய்யும், எனவே சிறிலங்காஅரசின் தந்திரோபாயங்களுக்குள், சிக்குண்டு போகாமல் இருப்பதற்கு,

பல்வேறு தளங்களில், விடுதலைக்கான செயற்பாடுகள், முன்னெடுக்கப்படல் வேண்டும். தாயகத்தின் தமிழ்த்தேசிய அரசியல் தலைமைகளிடம், தமிழ் அரசியல் விடுதலைக்கான, அடிப்படைக் கோட்பாடுகளைத் தக்கவைப்பதிலும், தாயகத்திற்கு வெளியே, அக்கோட்பாடுகளைப் பலமடையச் செய்யும் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய வகையிலும், மனப்போக்கில் மாற்றங்கள் நிகழ வேண்டும். அதன் திரட்சிதான் விடுதலைப்போராட்டத்தின் வெற்றிக்கான, அடித்தளமாக அமையும். எனவே பதவிகளின் தக்கவைப்பு என்பதை விடுத்து, உண்மையான கௌரவமான அரசியல் முன்னெடுப்புக்காக, துறவறம் பூணக்கூடிய மனோ நிலையில், தாயகத்தின் தேசியத்தைப் பற்றிப் பேசுகின்ற, அரசியற் தலைமைகள், தங்களது செயற்பாடுகளை முன்னெடுப்பார்களா? கூட்டமைப்பின் அரசியல் நகர்வு மீது வைக்கப்படும் விமர்சனங்களைக் கருத்திற் கொண்டு, ஒரு திறந்தவிவாதத்தை நடாத்தி, மக்களுக்கு விளக்கம் அளிப்பார்களா? தமிழ் மக்களின் அரசியல் அடிப்படைகளின் அடித்தளத்தில், தமது அரசியல் நகர்வுகளைச் செய்வார்களா, என்பதுதான் சராசரித் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக விளங்குகின்றன.

- முற்றும் -

–ஆகாஷ்–

# தீர்க்க தரிசி தந்தை செல்வாவின் தலைமைப்பேருரை...



டொனமூர் அரசியற் திட்டத்தின் கீழ் நடைபெற்ற, முதற் பொதுத்தேர்தலை, யாழ்ப்பாண மக்கள் பகிஷ்கரித்து விட்டனர். ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்கு, அரசாங்க சபையில் யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் எவருமே இருக்கவில்லை. இப்பகிஷ்காரம் அந்த அரசியற்றிட்டத்துக்குள் எதிர்ப்பையே பிரதிபலித்தது. இந்த நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே, இது ஒப்பற்றதொரு சம்பவமாகும். அந்த அரசாங்க சபைக்கு நடைப்பெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலிலே, அந்த அரசியற் திட்டத்தை மாற்றி, சிறுபான்மையோருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற, ஒரே கொள்கையுடைய பிரதிநிதிகளே, வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

அடுத்த பொதுத் தேர்தல், இப்போதைய சோல்பரி அரசியற்திட்டத்தின் கீழ், சென்ற 1947ஆம் ஆண்டிலே நடைபெற்றது. இத்திட்டம் சிறபான்மையினருக்குச் சாதகமாகத் திருத்தியமைக்கப்படமாட்டாது என்றே தோன்றியது. இச்சந்தர்ப்பத்திலே தமிழ் மக்கள், போராட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள் என்றே, அரசியல் விஷயங்களை அணுகி நோக்குவோர் பலர் எதிர்பார்த்தனர். ஆனால். என்னுடைய பேச்சின் முற்பகுதியில், யான் குறிப்பிட்டதைப்போல. தமிழ்பேசும் மக்களின் விடுதலைப்போரினைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்ற தீர்ப்பே, தமிழ்த் தொகுதிகளிலிருந்து கிடைத்தது.

இத்தருணத்திலே திருகோணமலையும், வடமாகாணத்துடன் சேர்ந்துகொண்டது. இதிலிருந்து, இவ்விஷயத்தையிட்டு தமிழ் மக்களுடைய அபிப்பிராயம் கோரப்பட்ட நேரத்திலெல்லாம், உரிமைப்போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும். என்றே அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என்பது தெளிவாகின்றது. தமிழ்ப் பொது மக்கள் என்றுமே தமது இலக்கினின்றும் பிறழவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தமது இலக்கினின்றும் தவறமாட்டார்கள்.

என்ற பெரிய நம்பிக்கை, எனக்கு இருக்கின்றது. இவ்விஷயத்தில் மட்டக்களப்பில் வாழும் தமிழ்பேசம் மக்களின் கருத்தும், திருகோணமலையிலும் வடமாகாணத்தலுமுள்ள, நம் சகோதரர்களின் கருத்தை ஆதரிப்பதாகவே இருக்கின்றதென்பது பல குறிகளிலிருந்து தெளிவாகின்றது.

இங்ஙனமாக இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கெல்லாம் தங்களுடைய இன்றைய அரசியல் நிலையைப்பற்றியும், எதிர்கால நிலையைப்பற்றியும், ஒரு நிலையான கொள்கை உண்டு என்று விளங்குகின்றது. அவர்களுக்குத் தாங்கள் ஒரு தனித்தேசிய இனம் என்ற உணர்ச்சி உண்டு. இம் மக்களின் நலத்துக்காக உழைக்க விரும்புவோர், உற்சாக மூட்டக்கூடிய இவ்வுணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது மக்களின் அரசியல் இலட்சியத்தை அடைவதற்கு, கட்டுப்பாடான முறையில் வேலை செய்வது அத்தியாவசியமாகும். ஆனபடியால், தமிழ் மக்களின் விடுதலையைக் காண்பதற்கு விரும்புபவர்களாய், நமது மக்களின் எதிர்காலத்தில் நம்பிக்கை உள்ளவர்களாய் உள்ள, உண்மை ஊழியர்களை ஒன்று சேர்த்து, ஒரு ஸ்தாபனம் நிறுவுதல் வேண்டும். அது தேவையாகவும் இருக்கிறது.

இனி, தமிழ்பேசும் மக்கள், சென்ற காலங்களில் அரசியல் உலகிலே தங்களை ஆபத்து எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாக எண்ணியது சரியாவென்று கவனிப்போம்.

–இளையபாரதி–

# புலிக்கொள்கையை கைவிடாத வரையில் யாழ்.பல்கலை மாணவர்களின் விடுதலை சாத்தியமற்றது

**– மேஜர்.ஜெனரல்.மஹிந்த ஹத்துருசிங்க.**



பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டியது, பெற்றோரின் கடமையாகும். அந்தப் பிள்ளைகள் தவறான வழியில் செல்வார்களேயானால், அதற்கான பொறுப்பில் இருந்து, பெற்றோர் ஒருபோதும் விடுபட முடியாது. பிள்ளைகள் அவ்வாறு தவறான வழியில்ச் சென்று, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் போது, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் அதிகாரிகள், ஏனையோரது நலனைக் கருத்தில் கொண்டு, சட்டத்தைச் செயற்படுத்தும் போது, அக்குற்றத்தை அரசாங்கத்தின் அல்லது பாதுகாப்புத் தரப்பினர் மீது சுமத்துவது, தவறானது என யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

பிள்ளைகள் அனைவரும் சமமானவர்களே, பெரியோர்கள் என்ற முறையில் நாம் பிள்ளைகள் மீது அன்பு கொண்டுள்ளோம். அனைவரது பிள்ளைகளையும், எமது பிள்ளைகள் போன்றே கவனிக்கின்றோம். மகன் ஒருவரதும், மகள் ஒருவரதும் தந்தை என்ற ரீதியில் யாழ்ப்பாணத்தின் பிள்ளைகளையும், எனது பிள்ளைகளை நோக்குவது போலவேநோக்கக்கூடிய தகுதியும் திறமையும் எனக்கு உண்டு.

எனினும் பிள்ளைகள் சிலரது முறையற்ற செயற்பாடுகளால், ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் வாழ்க்கை, படுகுழியில் விழுவதை, யாரும் எச்சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கப் போவதில்லை. யாழ்ப்பாணத்தின் ஆயிரக்கணக்கான பெற்றோர், தமது பிள்ளைகளை குணநலன் மிக்க பிள்ளைகளாக, சமூகத்திற்கு அனுப்புவதுபோல், ஒரு சில பெற்றோர் மாத்திரம்,• சமூக விரோத செயல்களில் ஈடுபடும் பிள்ளைகளை, சமூகத்திற்கு அனுப்புவது, ஏன் என்பது கேள்விக்குறியாகியுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களை நாம் துரதிஷ்டவசமாக கண்டிருந்தாலும், பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

யாழ். பல்கலையில் குழப்பத்தை விளைவிப்பதற்குப், பின்னணியிலுள்ள அரசியல்வாதிகளின் பிள்ளைகள் யாரும், யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்காதமையினால், யாழ். பல்கலைக்கழகத்திற்குள் கலவரங்களும், குழப்பநிலையும் தோன்றுவதில், அவர்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

அவர்களது பிள்ளைகள், சர்வதேச பாடசாலைகளிலோ, அல்லது வெளிநாடுகளிலோ கல்வி பயில்வதாக நான் அறிகின்றேன். யாழ்ப்பாண மாணவர்கள் தலையிட்டு, மேற்கொள்ளும் கலவரங்கள் காரணமாக, தமது கல்வியே இருளடையும் என்பதை, அந்த மாணவர்களும் பெற்றோரும் புரிந்து கொள்ளாமையானது, அந்த மாணவர்களதும், பெற்றோரதும், பொதுவாக நாட்டினதும் அபாக்கியமே.

பொலிஸாரினால் சில மாணவர்கள் கைது செய்யப்பட்டமையானது, அவர்கள் மீது கொண்ட வெறுப்பினாலோ, அல்லது வேறு அரசியல் காரணங்களாலோ அல்ல. நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் ஒழுங்கு மீறப்பட்டு, ஏனையவர்களையும் அதற்காக உந்துதலளித்து, அமைதியற்ற முறையில் செயற்பட்டதன் காரணத்திலாகும். விடுதலைப்புலிகளால் தமது இயக்கத்திற்கு, தமிழ் இளைஞர் யுவதிகள் பலவந்தமாக இணைத்துக்கொள்ளப்பட்ட, காலமும் மக்களின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த, வீதித் தடைகள் ஊடாகப் பயணித்த காலமும், மின்சாரம் மற்றும் போக்குவரத்து போன்ற வசதிகள் இல்லாமையினால், தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருந்த காலமும், சமாதானம் மலர்ந்து 03 வருடங்கள் கழியும்பொழுது, அந்த மாணவர்களும் பெற்றோர்களுக்கும் மறந்துபோயிருப்பது துரதிஷ்டமானதோர் விடயமாகும்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மாணவர்கள் சிலரை, தனிப்பட்ட முறையில் தலையிட்டு விடுவித்துக்கொள்வதற்காக, நான் எடுத்த முயற்சி வெற்றியடைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். என்றாலும் ஏனைய மாணவர்கள் நால்வரும், தொடர்ந்தும் எமது தலைவர் பிரபாகரனே, நாங்கள் அவரின் ஆதரவாளர்களே, என்ற கொள்கையுடன் இருக்கின்றனர்.

தமது வர்க்கத்தினரை மட்டுமன்றி, முழுநாட்டையும் அழிவுக்கு இட்டுச் சென்ற, விடுதலைப்புலித் தலை வரை, தமது தலைவனாக கருதும் கொள்கையில் இருக்கும் வரையில், அவர்களின் விடுதலைக்காக நான் ஆஜராக முடியாது. ஏனெனில் நான் எனது பிள்ளைகளின் தந்தையைப்போன்று, யாழ்ப்பாணத்தில் இருக்கும் மேலும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் தந்தை என்பதுடன், பாதுகாப்பையும் வழங்கும் பாதுகாப்பு தரப்பின் பிரதானி என்பதாலாகும்.

தாய் ஒருவருக்கு தனது பிள்ளைக்காக கண்ணீர்விட வேண்டி ஏற்பட்டமையானது, எனதோ அல்லது வேறு யாருடையதோ குற்றத்தினால் ஏற்பட்டதொன்றன்று. பிள்ளையை உரிய வழி நடத்தாதது அந்தத் தாயின் குற்றமாகும். பிள்ளையை நேர்வழிப்படுத்தும் தாய்க்கோ அல்லது தந்தைக்கோ, ஒருபோதும் கண்ணீர்விடவேண்டி ஏற்படாது. அந்தப் பெற்றோர் செய்யவேண்டியது, தனது குற்றம் புரிந்த பிள்ளையைக் கைதுசெய்த, பாதுகாப்புத் தரப்பினர் மீது குற்றம் சுமத்தாமல், அவர்களை தவறான வழியில் செலுத்திய வங்குரோத்து அரசியல்வாதிகள் மீது குற்றம் சுமத்துவதுடன், பிள்ளைகளுக்கு நல்வழியைக் காட்டத்தவறிய தம் மீதே, குற்றம் சுமத்திக்கொள்வதாகவும் அது அமையும்.

சட்டத்தை அமுல்படுத்தும்போது, குற்றம் புரிந்தவர் சிங்களமா, தமிழா அல்லது முஸ்லிமா என்ற விபரங்கள் முக்கியமல்ல. தெற்கே பல்கலைக்கழக மாணவர்கள், சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களில், சட்டம் ஒரே வடிவிலேயே செயற்பட்டமை, நீங்கள் நன்கறிந்த விடயமாகும்.

உங்கள் எதிர்ப்பார்ப்பின்படி, தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிப்பதானது, யாழ்.கட்டளைத் தளபதியாகிய என்னால் நிறை வேற்ற முடியாத விடயம் என்பதை, வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்கள் பிரபாகரன் தமது தலைவர் என்ற கொள்கையில் இருந்து விடுபட்டு, உரிய வழிக்கு திரும்பிய பின்னர் தான், அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

அந்த மாணவர்களின் சமூக விரோத மனநிலையை மாற்றி, அவர்களை விடுவித்துக் கொள்வதை துரிதப்படுத்திக் கொள்வது, பெற்றோர்களதும் அவர்களது கல்விக்கு பொறுப்பான யாழ்.பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களதும், பொறுப்பென்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

# அடங்காப்பற்றின் மாவீரன்! வணங்காமுடி பண்டாரவன்னியன்

சென்றவாரத் தொடர்ச்சி...



பனங்காமத்திலிருந்து ஐந்து நாட்கள், படைகள் புறப்பட்டு பூநகரியும், வெற்றிலைக்கோணிக் கோட்டைகளும், தகர்த்து தீக்கிரையாக்கப்பட்டுவிட்டது. படைகள் விரைவில் பனங்காமம் திரும்பலாம் என்ற செய்தி, பனங்காமம் முழுவதும் பரவிவிட்டது.

இதற்கிடையில், நல்லமாப்பாணர் விழுப்புண் அடைத்து மிக அபாய கட்டத்தில் இருப்பதாகவும், இதனாலே படைகள் விரைந்து தம் தளம் திரும்புகின்றன எனவும், செய்திகள் காட்டுக் காய்ச்சல் போல், விரைவாக எங்கும் பரவியது. மக்கள் சோகங்களுடன், கைலாசநாதர் ஆலயமே தஞ்சம் என, விஷேட பூசைகள் எல்லாம் நடாத்தினார். ஆறாம் நாள் படைகள், பனங்காமம் வரும் என்றும், நல்லமாப்பாணர் நிலைகாண, மக்கள் எல்லோரும் படைகள் வரும் வீதியெங்கும் நின்று எதிர்பார்த்தனர்.

இவ்வேளைகளில், எங்கள் மன்னர் மிக வலிமையான பூநகரிக் கோட்டையைத் தாக்கும் போது, நல்லமாப்பாணர் வெற்றிலைக்கேணி சிறிய கோட்டையைத் தகர்த்துவிட்டு, இரவோடு இரவாக வந்து, கப்பற்படையைக் கொண்டு சென்று, துறைமுகத்திலும் மிக மூர்க்கமாகச் சண்டைபோட்டாராம்.

கப்பற் படையை மன்னர் எப்படி உருவாக்கினார்? டச்சுப்படைக்கு எதிராக கப்பற் படைகொண்டு சென்றவரோ? என நம்பியும் நம்பாமலும் வினாக்களைக் கேட்டுக்கொண்டும், அதில்தான் அவருக்கு வயிற்றில், டச்சுப்படைகளின் குண்டுகள் பாய்ந்துள்ளது எனவும், பாரிய விழுப்புண் ஏற்பட்டதால், வைத்தியர்களும் தங்களால் இயன்றவரை முயற்சித்து, கடைசியில் கைவிரித்து விட்டார்கள் எனவும், செய்திகள் பரவிக்கொண்டு இருந்தன.

பனங்காமத்து அரண்மனையை சோகம் ஆட்கொண்டு துன்பத்தைப் பூசிக் கொண்டு இருந்தன. சூரியன் மறைந்து விட்டான். எங்கும் இருள் பரவிய வண்ணம் இருந்தது. நேரம் செல்லச் செல்ல, வதந்திகளும் மிக வேகமாக பரவியது. வரும் வழியில் நல்ல மாப்பாணர் உயிர் பிரிந்துவிட்டது என்றும், இதனாலே தடங்கல் ஏற்பட்டு நள்ளிரவுக்கு பிந்தியே, யாவரும் வருவார்கள் என்றும், சில விசமிகளால் கதை பரவியது.

ஏழாம் நாள் அதிகாலை, சூரியன் பனங்காமத்தில் நடைபெறும் நிகழ்வுகளைக் காணும் ஆவலில், விரைவாக வந்தான். அவனை விட வேகமாக புரவி ஒன்றில், தூதுவன் ஒருவன் விரைவாக வந்து, கைலாசநாதர் ஆலயத்தைக் கடந்து, அரண்மனையை அடைந்து, வன்னி நாச்சியார் முன் சிரம் தாழ்த்தி, கைலாய வன்னியனின் முத்திரையை எடுத்துக்காட்டி, அவரின் ஓலையையும் அரசியிடம் கையளித்தான்.

வன்னி நாச்சியும் ஆவலுடன் அந்த ஓலையை வாங்கிக் கொண்டு வெளியே நிற்கும் சேவகர்களைக் கொண்டு, ஒற்றனிற்கு சிரமபரிகாரம் செய்வதற்கான கட்டளையை வழங்கிவிட்டு, செய்தியை ஆவலுடன் பிரித்து வாசிக்கத் தொடங்கினார்.

ஒற்றன் புரவியில்க் கொண்டு வந்த செய்தி, மக்கள் மத்தியில் விரைவாகப் பரவியதால், செய்தி அறியும் ஆவலுடன், இரவு முழுவதும் விழித்திருந்து சிவந்த கண்களுடன், மக்கள் அரண்மனையைச் சுற்றிக் குழுமத் தொடங்கினார்கள். கூடிய மக்களுக்கு, ஒற்றனின் வருகையை அறிவிக்க வேண்டுய தேவை, வன்னி நாச்சியாருக்கு ஏற்பட்டமையால், அவசரமாக தன்னை அலங்கரித்துக்கொண்டு, அரண்மனை மாடத்துக்கு விரைந்தார்.

அவரின் தோற்றத்தைக் கண்ட மாத்திரத்திலேயே மக்கள் மனங்களில் இருந்த பயம் குறையத் தொடங்கியது. ஆர்ப்பாட்டமாக இருந்த மக்கள் கூட்டம், அரசியின் வருகையுடன் அமைதியானது. எல்லோரும் அரசி கூறப்போவதை, ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தனர்.

அதில் விழுப்புண் அடைந்து, சிகிச்சைக்காக பனங்காமம் திரும்பிய வீரர்களும், வயது முதிர்ந்த ஆண்களும், பெண்களும் போருக்குப் போக முடியாத குடும்பத்தில், ஒரு ஆண்வாரிசு எனக் கருதப்பட்ட ஆண்களும் (இவர்கள் அன்றைய காலங்களில் போருக்குப் போவதில்லை. காரணம் இவர்கள் ஒரு ஆண் மகன் ஆகையால், பெற்றோருக்கு இறுதிக் கடன் செய்ய வேண்டும் என்பதற்காக, இவர்கள் போர் நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை) சிறார்களும் கூடியிருந்தனர்.

தொடரும்...

**– நாகநாதன் –**

# பிராந்தியச் செய்திகள்



## புலிகள் வெளிநாடுகளில் இயங்குவது எமக்கு நல்லதுதான் - அமைச்சர் டலஸ் அழகப்பெரும



விடுதலைப் புலிகளின், வெளிநாட்டு பிரிவுகள் செயற்படும்வரை, இலங்கை அரசு ஜெனீவா மனித உரிமைப் பேரவை விசாரணைகளில், கலந்து கொள்ள நேரிடும் விடுத லைப் புலிகள் மீதும் மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

எனவே விடுதலைப்புலிகள், முழுமையாக அழியாமல், இன்னமும் வெளிநாடு களில் இயங்குவதால், அவர்களை நீதிமன்றத்துக்கு இழுக்க முடியும். இவ்வாறு இலங்கை அமைச்சர், டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை அகுரஸ்ஸ பகுதி யில் நடைபெற்ற, அரசு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட அமைச்சர், டலஸ் அழகப்பெரும, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓர் வழக்கறிஞர். சட்டத்துறையில் 30 ஆண்டு கால அனுபவம் உள்ளவர். இவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றாலும், சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமென வெளிநாடுகளில் சிலர் முயற்சி செய்கின்றனர்.

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகள், தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். இது எமக்கு சாதகமான அம்சம். கொள்கை ரீதியாக விடுதலைப் புலிகள், இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு அழிக்கப்பட்டனர். எனி னும் விடுதலை புலிகளின், சர்வதேச வலையமைப்பின் நடவடிக்கைகள் இன்னமும் தொடர்வதால், நாமும் இராணுவ நடவடிக்கைகளுக்கு தயாராக இருக்க வேண்டும் என்பதை, சர்வதேச நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. அடுத்த தலைமுறை தீவிரவாதிகள் தோன்றாமல் இருக்க கைதுகள் அவசியமாகின்றன என்று தெரிவித்துள்ளார்.

## ஊடகத்துறையை நசுக்கும் நாசகாரர்களின் செயல் கண்டனத்துக்குரியது.

(நமது நிருபர்)

எமது சகோதரப் பத்திரிகையான, உதயன் பத்திரிகையின் விற்பனை முகவர், தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், தினப்புயல் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறான நிலை, மீண்டும் ஒரு வன்முறைக்கு வழி கோலும் என்பதில், எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்த வாரம், உதயன் பத்திரிகை விற்பனை முகவர் ஒருவர், பருத்தித்துறை செல்லும் வீதியில் வைத்து, காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டு, யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக, செய்திகள் தெரிவிக்கின்றது. கடந்த சில தசாப்தங்களாக, தமிழ் சிங்கள ஆங்கில ஊடகங்கள் வெளி யிடும் செய்திகளுக்கு, அரசு பகிரங்கச் செய்தித் தணிக்கைகளை அமுல்ப்படுத்தி இருந்தது என்பதை, யாவரும் அறிவர். இவ்வாறான அறிவித்தல்கள், பத்திரிகைத் தறையில் பாரிய ஒரு தாக்கத்தை விளைவித்திருந்தது. தற்போது யுத்தம் முடிவுற்ற இந்த காலகட்டத்திலும் கூட, இவ்வாறான ஊடக அடக்கு முறை மீண்டும் தலை தூக்குவது என்பது, ஐ.நா. ஊடக சட்டத்தையும், ஊடக சுதந்திரத்தையும் சீர் குலைக்கும் ஓர் நடவடிக்கை ஆகும்.

இவ்விடயம் தொடர்பில், அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுக் கொடுப்பது அவர்களின் பாரிய பொறுப்பாகும்.

## இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக அணி திரளும் ஈ.பி.டி.பி யினர்.



ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியின் தலைவரும், அமைச்சருமான டக்லஸ் தேவானந்தா நான்கு வயது குழந்தை மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் கொலையினைக் கண்டித்து இராணுவத்தினருக்கு எதிராக வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் பொழுது ''புலிக் கொடியை ஏற்றிய சந்தேக நபர்களை விரைவாக கைது செய்த இராணுவம், ஏன் கொலையாளிகளை இன்னும் கைது செய்யவில்லை'' எனவும் ஈ.பி.டி.பி.யினர் கோசம் எழுப்பினர். கடந்த மாதம் 27ஆம் திகதி சுதாரனி குணசேகரம் எனும் நான்கு வயது சிறுமி, மண்டைதீவிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து காணாமல் போயிருந்தார்.

இவரது சடலம் பாழடைந்த கிணற்றிலிருந்து மறுநாள் மீட்கப்பட்டது. மரண விசாரணைகளின் பொழுது குழந்தை பாலியல் வன்புணர்விற்குட்பட்டமை நிரூபிக்கப் பட்டது. இதேபாணியிலான மரணம் கடந்த காலத்தில் நெடுந்தீவிலும் பதிவாகியது. யாழ் தீவகப் பகுதிகளில் அரசியல் மற்றும் சிவில் நடவடிக்கைகளில் நேரடியாக ஆதிக்கம் செலுத்துகின்ற ஈ.பி.டி.பி.யினர் இலங்கை இராணுவத்திற்கெதிராக ''ரோஜாவன சிறுவர் கழகம்'' எனும் பெயரில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். அரச அதிகாரிகள், 300ற்கும் மேற்பட்ட பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இவ்வார்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். புனித, பேதுரு ஆலய முன்றலில் ஆரம்பித்த இவ்வார்ப்பாட்ட பேரணி மண்டைதீவு பொலிஸ் நிலை யம் முன்பாக நிறைவடைந்தது. ஆர்ப்பாட்டத்தின் பொழுது இலங்கை இராணுவத்திற்கெதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இவ்வாறன ஓர் நிலையில் பொலிஸார் 31 வயதான ஈ.பி.டி.பி ஆதரவாளரையே இக்கொலையின் பிர-தான சந்தேக நபராக கைது செய்தனர். ஆயினும் இக்கைது தொடர்பில், ஊடகத் துறையினர் பொலிஸாரிடம் வினவிய போது செய்தி தொடர்பாக கருத்துக் கூற அவர்கள் முற்றாக மறுத்தனர்.

## தெரிவுக்குழுவின் அறிக்கை செல்லுபடி அற்றது. மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு.



பிரதம நீதியரசருக்கு எதிரான, குற்றவியல் பிரேரணை தொடர்பான, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை, இரத்துச் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை, சட்டவலுவற்றது என உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஏற்கனே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தலைமை நீதி யரசர் ஷிராணி பண்டாரநாயக்காவைப், பதவிநீக்கம் செய்யும் நோக்குடன், அரசாங்கம் கொண்டுவந்த, கண்டனத் தீர்மானம் மீதான, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை, செல்லுபடியாகாது என்று, மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று அறிவித்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க தாக்கல் செய்திருந்த, மனு மீதான தீர்ப்பின்போதே, நீதிமன்றம் இந்த ஆணையை பிறப்பித்துள்ளது. தலைமை நீதியரசர் மீதான, பல குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் விதத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை சமர்ப்பித்தது.

ஆனால் இந்த தெரிவுக்குழு விசாரணை, நீதியாக நடக்கவில்லை என்று, அந்தக் குழுவில் இருந்த எதிரணி உறுப்பினர்கள், அந்த அறிக்கையை நிராகரித்திருந்தார்கள். நாடாளாவிய மட்டத்தில் சட்டத்தரணிகளும் தெரிவுக்குழு அறிக்கை தவறானது என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதேவேளை, ஷிராணி பண்டாரநாயக்க மீதான, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில், ஆராய்வதற்காக அரசுத்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சிறப்பு சுயாதீனக் குழுவொன்றை அமைத்துள்ளதாக, அரச ஊடகம் இன்று அறிவித்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணையை, 10ஆம் 11ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக, அரசாங்கம் அறிவித்த சற்று நேரத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக தகவல்களை வழங்கி பிரதம நீதியரசருக்காக வாதாடியவர், சிரேஷ்ட சட்டதரணி நீலகண்டன் ஆவார்.நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை செல்லுபடி அற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## ரிசானா நபீக்கின் சடலம் சவுதியில் அடக்கம்





சவுதிஅரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட, இலங்கைப் பணிப்பெண்ணான ரிசானா நபீக்கின் சடலம், அந்த நாட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக, அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. சவுதியில் 4 வயது குழந்தையைக் கொலை செய்ததாக குற்றம் சுமத்தி, மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிசானா நபீக், சவுதி அரேபியாவிலேயே கழுத்து வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், ரிசானாவின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கோரிக்கை விடுத்தது.

எனினும் சவுதி அரசாங்கத்தின் சட்டத்திற்கு அமைய, சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க முடியாதென, சவுதி அரசாங்கம் அறிவித்துவிட்டது. இதனால் ரிசானா வின் சடலம், சவுதிஅரேபியாவிலே நல்லடக்கம் செய்யப்பட்டதாக, இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

## ரிசானாவிற்கு அனுதாபச்செய்தி

### வவுனியா முஸ்லிம் காங்கிரஸ் பிரதேசசபை உறுப்பினர் M.M.சாஜிதீன்

சவுதி அரேபியாவில் சிறைச்சேதம் விதிக்கப்பட்ட மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட எமது சகோதரி ரிசானா றபீக்கின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையுற்றிருக்கும் வன்னி மக்களதும் செட்டிகுளத்திற்கு உட்பட்ட பிரதேச மக்களதும் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ரிசானா சுவர்க்கம் செல்ல இறைவனைப் பிரார்த்தித்து இனிவரும் காலங்களில் குறிப்பாக இலங்கைவாழ் முஸ்லிம்கள் தங்களது சகாத் நிதிகளை உரிய முறையில் வழங்கி இவ்வாறான ஏழைக்குடும்பங்களில் துயரங்களில் பங்குகொள்வதால், சிறுவயதினிலே கஷ்டத்தின் நிமித்தம் வெளிநாடு செல்வதைத் தடுக்க முடியும்.

ஆகவே ரிசானாவை இழந்து ஆழ்ந்த துன்பத்திலுள்ள குடும்பத்தினருக்கு, மூதூர் மக்களுக்கும், என் சார்ந்தோரும், நானும் அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## கட்டுமரம் கவிழ்ந்து மீனவர் பலி

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீ-னவர் ஒருவர் கட்டுமரம் கவிழ்ந்து உயிரிழந்துள்ளார். வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பகுதியில் கடந்த வாரம் இடம் பெற்ற இவ்விபத்தில், 57 வயதான மயில் வாகனம் துரைசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதிகாலை வேளையில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது எனவும், உயிரிழந்த மயில்வாகனம் துரைசிங்கம் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தகவல்கள் தெரியவந்துள்ளது.




## விராத் கோஹ்லியுடன் காதல் இல்லை – நடிகை சஞ்சனா




கன்னடம், தெலுங்கு பட ரசிகர்களுக்கு, கஞ்சனாவை தெரியாமல் இருக்காது. இத்தனைக்கும், இவர் அறிமுக மானதே, ''காதல் செய்வீர்'' என்ற தமிழ் படத்தில் தான். இதற்கு பின், பெங்களூர், ஐதராபாத் பக்கம் போய்விட்டார்.

மும்பை, டில்லி, பெங்களூர் போன்ற நகரங்களில், பிரபல கிரிக்கெட் வீரர், விராத் கோஹ்லியுடன், இவர் சுற்றிக் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி வந்தன. ஐ.பி.எல், கிரிக்கெட் போட்டியில், பெங்களூர் ராயல் சேலஞ்சர் அணிக்காக, கோஹ்லி விளையாட வந்தபோது, அவருக்கும், சஞ்சனாவுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. இதையடுத்து, இருவரும், பல இடங்களில் ஜோடி போட்டு சுற்றினாலும், காதல் இல்லை என்று, இருவருமே திட்டவட்டமாக மறுத்தனர்.

இதுகுறித்து கஞ்சனா கூறு கையில், ''விராத் கோஹ்லியுடன், பெங்ளூரில் பல இடங்களில் சுற்றியது உண்மை தான். அதற்காக, நாங்கள் காதலிப்பதாக அர்த்தம் இல்லை. நாங்கள் இருவரும், நண்பர்கள் அவ்வளவு தான். எங்களுக்கு இடையே, காதலும் இல்லை கத்தரிக்காயும் இல்லை என்கிறார், சஞ்சனா.

## நள்ளிரவு பார்ட்டிகளில் நான் கலந்து கொண்டதே இல்லை –நடிகை ஹன்சிகா



''மாப்பிள்ளை'', ''எங்கேயும் காதல்'' படங்களில் நடிக்கத் தொடங்கியதில் இருந்தே, மற்றவர்களிடம் பழகுவதிலும், பேசுவதிலும் ஒரு இடைவெளி வைத்தே செயல்பட்டு வந்தார் ஹன்சிகா. ஆனால் அதுவே அவரது சினிமா மார்க்கெட்டுக்கு, ஆப்பு வைக்கும் செயலாகி விட்டது.

அதனால் பின்னர் படப்பிடிப்புத் தளங்களில், தன்னுடன் நடிக்கும், ஹீரோக்களுக்கு அருகில் அமர்ந்து உரையாடும் நடிகையாக தன்னை மாற்றிக் கொண்டார் ஹன்சிகா. இப்படி கடுகதியில் பிழைக்கத் தெரிந்த நடிகை யாகி விட்டதால் அதன்பிறகு இளவட்ட ஹீரோக்களுக்கு, ஹன்சிகா மீது அதிக படியான ஈர்ப்பு ஏற்பட்டது.

திரைக்குப்பின்னால், தீவிரமாக சிபாரிசு செய்யவும் தொடங்கினார்கள். ஆனால் அந்த புதிய நட்பில், பூரித்துப் போன ஹன்சிகா,அதையடுத்து மெல்ல மெல்ல, நடிகர்கள் நடத்தும் நள்ளிரவு பார்ட்டிகளிலும் விசிட் அடிப்பதாக, ரகசிய செய்திகள் கசிந்துள்ளன. குறிப்பாக, அந்த வம்புக்கார நடிகர், மற்றும் ''லட்டு'' படத்தின் முக்கிய காமெடி நடிகர்கள், அடிக்கடி அம்மணியை, பார்ட்டிக்கு அழைப்பதாகவும் கிசுகிசுக்கப் படுகிறது.

ஆனால் இந்தச் செய்தி, எப்படியோ நடிகையின் காதுகளை எட்டிய போது, தீயைத் தொட்டுவிட்டவர் போல், அதிர்ச்சியை வெளிப்படுத்துகிறாராம். சினிமாவுக்கு வந்து இதுவரை நான், எந்தவொரு பார்ட்டிகளிலும் கலந்து கொண்டதில்லை. பலர் அழைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு சென்றால் இமேஜ் கெட்டு போய் விடும். அதோடு பார்ட்டியில் கண்டதை சாப்பிட்டு உடம்பும் கெட்டுப் போகும் என்பதால், நான் அந்த மாதிரி விசயங்களுக்கு இடம் கொடுப்பதே இல்லை என்கிறார் ஹன்சிகா.

## ஐஸ்வர்யா ராய்க்கு ஆசைப்படும் பவர் ஸ்டார்.



தமிழ் சினிமாவில் 'பவர்ஸ்டார்' எனும் பட்டத்துடன் வலம் வந்து கொண்டு இருப்பவர், நடிகர் டாக்டர் சீனிவாசன் 'லத்திகா' படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமான சீனிவாசன், இப்போது 'ஆனந்த தொல்லை', 'கண்ணா லட்டு தின்ன ஆசையா', 'ஐ' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

அதில் இவர் நடித்த கண்ணா லட்டு தின்ன ஆசையா பொங்கல் விருந்தாக வர இருக்கிறது. சந்தானம், பவர்ஸ்டார், சேது ஆகிய மூவரும், விஷாகா சிங்கை விழுந்து விழுந்து காதலிக்கிறார்கள். கடைசியில் விஷாகா, யாருடைய காதலை ஏற்றுக்கொண்டார் என்பதை, முழுக்க முழுக்க காமெடியாக சொல்லியிருக்கிறார், டைரக்டர் மணிகண்டன்.

இது சீனிவாசன் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டியில், இப்படத்தின் டைரக்டர் மணிகண்டன், எனது லத்திகா படத்தின் 250 வது நாள் போஸ்டரைப் பார்த்து, உடனே சந்தானத்தைத் தொடர்பு கொண்டு, என்னை சந்திக்க வந்தார். இப்படத்தில் நடிக்கும்படி இருவரும் கேட்டனர்.

நானும் கதையைக் கூட கேட்காமல், உடன் நடிக்க ஒப்புக் கொண்டேன். படமும் நன்றாக வந்து இருக்கிறது. தற்போது ஷங்கரின் 'ஐ' படம் உள்ளிட்ட, 3 படங்களில் நடித்து வருகிறேன். ஷங்கர் சாருடன் நான் ஒரு போட்டோ எடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

ஆனால் அதை அவரிடம் சொல்லப் பயம். திடீரென ஷங்கரே வந்து, அண்ணே உங்களுடன் நான் போட்டோ எடுத்துக் கொள்ளலாமா, என்று கேட்டார். எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது என்றார். அழகி ஐஸ்வர்யா ராய் உடன் ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும். அதுதான் எனது ஆசை என்கிறார்.

## எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்! – ஆர்யா புலம்பல்



''நான் கடவுள்'' படத்துக்குப் பிறகு, ஆர்யாவைப் பற்றிய காதல் கிசுகிசுகளும் வெளியாகத் தொடங்கின. காரணம், அதற்கு முன்பெல்லாம் தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருந்த அவர், பின்னர், ஸ்பாட்டில் நடிகைகளைக் கிண்டல் செய்வதையே முக்கிய வேலையாகக் கொண்டிருந்தார்.

சினிமா விழாக்களுக்கு வந்தால் கூட, நடிகைகளிடம் போய் அமர்ந்து கொண்டு, அவர்களைச் சீண்டிக் கொண்டே இருப்பார். தனக்கு எதிரே மீடியாக்கள் இருந்தால்க் கூட கவலைப் பட மாட்டார். என் சுபாவம் இப்படித்தான். யாருக்காகவும் என்னை மாற்றிக் கொள்ளமுடியாது, என்பது போல் ஜாலிப்பேர்வழியாக தன்னை காட்டிக்கொண்டார் ஆர்யா.

ஆனால் அதுவே அவருக்கு வினையாகி விட்டது. பிரபுதேவாவை பிரிந்த நயன்தாராவுக்கு, தனது வீட்டிலேயே அடைக்கலம் கொடுத்தார். ஏற்கனவே ''பாஸ் என்ற பாஸ்கரன்'' படத்தில் நடித்த போதே, அவர்களைப் பற்றி கிசுகிசு பரப்பியவர்களுக்கு இது வெறுவாய்க்கு அவல் கிடைத்த கதையாகி விட்டது. அதனால் இஸ்டத்துக்கு அவர்களைப் பற்றி மெல்லத் தொடங்கினர். ஆனால் இப்போதே, ஆர்யாவின் கேலிக்கு ஆளாகும் அவரது பாசறை நடிகைகளும் மற்ற நடிகர்கள் நட்பு வைத்துக்கொள்வதையே நிறுத்தி விட்டனர்.

அதனால் தங்களது சினிமா வாழ்க்கை பாதிக்கும் என்று, உசாராகி விட்ட ஆர்யாவின் அபிமானத்திற்குறிய நடிகைகள், சமீப காலமாக அவரை விட்டு விலகிவிட்டனர். இதனால் எப்போதும் அம்மணிகளிடம், ஜொலியாக பேசிப்பழகி பொழுதை கழித்து வந்த ஆர்யா, இப்போது தன்னைக் கண்டாலே நடிகைகள் தலைத்தெரிக்க ஓடுவதைக் கண்டு, வேதனையில் துடிக்கிறார். எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்! என்று புலம்பித் தவிக்கிறார்.

## அஞ்சலியை அதிர வைத்த அமலாபால்



அஞ்சலிக்கு, எப்படி பேர், சொல்லும் படியாக ''அங்காடித்தெரு'' அமைந்ததோ, அதேபோல், அமலா பாலுக்கும் ''மைனா'' படம் அமைந்தது. அதன் பிறகு பெரிய ஹிட் படங்களில், அவர் இடம் பெறவில்லை என்ற போதும் இப்போது விஜய் நடிக்கும் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாகி விட்டார்.

இதனால் மார்க்கட்டில் இருக்கும் மற்ற நடிகைகள், அமலாபாலை ஆச்சர்யமாக பார்க்கின்றார்கள். ஆனால் அஞ்சலியோ, கடும் அதிர்ச்சியில் இருக்கிறார். பல படங்களில் திறமையை நிரூபித்த போதும், நம்மைவிட அமலாபால், பெரிய கதாநாயகி என்ற இடத்தைப் பிடித்துவிட்டாரே, இது எப்படி சாத்தியமானது என்று, மனதளவில் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றார்.

இதையடுத்து, நாமும் இனி, மேல்தட்டு ஹீரோக்களுடன் நடிப்பதற்காக, கல் எறிய வேண்டும் என்று, தனது சினிமா சகாக்களுடன் தீவிர டிஸ்கஷன் நடத்தி வருகிறார் அஞ்சலி. அப்போது நடந்த விவாதத்தின் முடிவில், இப்போதைய சினிமாவில் ஹீரோக்களை விட, டைரக்டர்கள் தான் முக்கியம்.

அதிலும், ஸ்டார் வேல்யூ கொண்ட படங்களை இயக்குபவர்களை, முதலில் வசப்படுத்தவேண்டும். அதை சரியாக செய்தால், பலம் நழுவி பாலில் விழுந்த கதையாய படவாய்ப்பு தானாக, மடியில் வந்து விழும் என்று, ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்.


அதையடுத்து இப்போது, மெகா படங்களை இயக்கும் டயரக்டர்கள் சிலருக்கு ரூட் போடத் தொடங்கியிருக்கிறார் அஞ்சலி. ஆக, அஞ்சலியின் கவுண்டவுன் ஸ்டார்ட் ஆகிறது.

## இசையமைப்பாளர் எம்.எஸ்.வி க்கு டாக்டர் பட்டம்



இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதனுக்கு, நெல்லை. பல்கலை சார்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படுகிறது. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின், 20வது பட்டமளிப்பு விழாவின்போது, இப் பட்டம் வழங்கப்படவுள்ளது. இது குறித்து பல்கலை. துணைவேந்தர் ஏ.கே. குமரகுரு கூறியதாவது:

பட்டமளிப்பு விழாவிற்கு, கவர்னரும், பல்கலைகளின் வேந்தருமான, ரோசையா தலைமை வகிக்கிறார். இந்திய பாதாப்பு ஆராய்ச்சி, மற்றும் மேம்பாட்டு கழகத்தின், முதன்மை கட்டுப்பாட்டு அதிகாரி, விஞ்ஞானி சிவதாணுப்பிள்ளை, பட்டமளிப்பு உரை நிகழ்த்துகிறார். தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன், சிறப்புரையாற்றுகிறார். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றியவர் மனோன்மணியம் சுந்தரனார். அந்தப் பாடலுக்கு இசையமைத்தவர், மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன அவர்கள். என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கவிதைப் பூங்கா




## அன்புள்ள அம்மா

கருவுற்றாய் என்னை
புதியவனின் வரவை
அனுபவத்தால்
உறுதிசெய்தாய்
மருத்தவரே தெய்வமென
பத்துமாதம் காத்திருந்து
பத்திரமாய் என்னை
இவ் வையகத்தில்
இறக்கி வைத்தாய்
பசித்திருந்து
விழித்திருந்து
பக்குவமாய் என்னை
வளர்த்தெடுத்தாய்
இப்பாரினிலே – பல
தடம் பதிக்கும்
நீ பெற்றவனை
கண்ணுறாது – இடைநடுவில்
பிரிந்து விட்டாயே
ஏனம்மா – ஏன்
விம்முகிறேன்
வெதும்புகிறேன்
முடிவுதான் தெரியவில்லை
இன்னும் எனக்கு.

இளையபாரதி
. அம்பாறை

## பயன் தான் என்ன?



காதலிப்பதில் என்ன பயன்
நீ வரும் பாதை
எதுவென்று தெரியாமல்.
பாதை தெரிந்தும்
பயன் தான் என்ன?
நீ யாரென்று தெரியாமல்

-கவிஞர் தாரணி-
கோப்பாய்

## ஹைக்கூ ...

என் மீது – நீ
சாய்ந்த பொழுதுகள்
சொர்க்கம், இனி...

- இரணியன்
பாழ்ப்பாணம்



## பெயர் சொல்லும் இதயம்




என்
உள்ளத்தின் உயிராய் – தினம்
துடிக்கும் என்
இதயத்தின் மூச்சாய் – என்
உள் இருக்கும் – உன்
நினைவு தினம்
என்னை சுட்டெரிக்கின்றது.

சுடச்சுட வெண்மை தரும்
வெண் சங்கு போல்!
எரிக்க நினைக்கும்
நினைவுகள் யாவும்.
கனவாகி மாறி
துணையாக உனை
வேண்டுவது. உனக்கு
இணையாக ஒரு ஜீவனையும்
காணவில்லை வையகத்தில்!

எனக்கென ஜனனித்த உன்னை
பிறர்க்கென ஈர்ந்து
கொடையாளி என்ற பெயர்
எனக்கெதற்கு
ஈகை குணமில்லா கஞ்சன் என்று
கூறினாலும் ஏற்று நிற்கும்
உன் பெயர் சொல்லும்
என் இதயம்.

திலீபன்
ஆட்காட்டிவெளி
மன்னார்.









## பண(ம்) -பாசம்.....

பாச உறவுகளுக்குப்
பணங்காசு
தேவையென்றால் – என்
கூடப்பிறந்த
அவர்கள்...
அண்ணனென்றும்
தம்பியென்றும்
அன்பு சொல்லி
வந்து நிற்பார்!

இருக்குமிடம்
வந்தவர்கள் – நான்
கொடுக்கும் பணம்
பெற்றதுமே... போயிற்று
நாளைக்கு வாறமென்று;
நகர்ந்து சென்றிடுவார்!

இருக்கையிலே
கொட்டிக் கொடுத்த
பணம் போச்சு!
பேரன்னுப்
பெட்டகத்தோடு
எட்டிப் பார்ப்பதற்கும் – ஒரு
குட்டிநாய்
கூட இல்லை!
கொடுத்த பணத்தை
வட்டிக்கு
விட்டிருந்தாலும் – அது
குட்டிவிட்டு
வளர்ந்திருக்கும்!

இனியெனக்குத்
துணை (க்கு) – ஒரு
வேலைக்காரியைப்
போல் – அன்று
சொக்கி சுகமளித்த – என்
இல்லாள்– அவள்
மட்டும்தான் – என்
கட்டையைத்
தொட்டு அழ
கடைசியில்
மிச்சம்

பொன். நவநீதன்
பாண்டிருப்பு – 02
கல்முனை

## இயற்கை அன்னையே

அகதி வாழ்வு முடிந்த – எங்களுக்கு
திரும்பவும் சோதனையா – அன்னையே
பிறந்தது குற்றமா
அதற்கு தண்டனை
மழையும் – சூறாவளியுமா – அன்னையே
வீட்டை இழந்து
வீதிக்கு வந்தால்
மழை வெள்ளத்தில்
கண்ணிவெடிகள் – அன்னையே
ஆறுகள் – குளங்கள் உடைந்து
நெல்வயல்கள்.
வெள்ளத்தில் அழிவது
உனக்கு விருப்பமா – அன்னையே
திரும்பவும் அகதிமுகாமில்
அடைப்பட்டிருப்பதை
வேடிக்கை பார்க்கும் – அன்னையே
கண்திறக்கமாட்டாயா..!

வீ.அருள்ராஜா
பாடசாலை
வீதி
கொம்மந்தறை



## தினப்புயல்

தினப்புயல் தந்த
வனப்புயல் நான்
மனப்புயல் வீசும்
வரிப்புயல் நான்.

வரிப்புயல் கூறும்
கவிப்புயல் நான்
கவிப்புயல் தந்த
கரும்புயல் நான்.

வாழ்வில் புயல் வந்து வீசிடுது.
வார்த்தையும் புயல் போல் பேசிடுது.
வாழ்க்கையின் புயல்கள் ஓய்ந்து
விட
வாரம் ஒரு முறை வந்துவிடு
புயல் போல் செய்திகளைத்
தந்துவிடு – தினப்புயலே!
உன் பணி தொடர
என் வாழ்த்துக்கள்.

டி.துரை
வித்தியாபுரம்




## இன்பத் தமிழ்

தமிழுக்கு
அமுதென்று பெயர் – இது
பசிக்கு நல் விருந்து
களைப்புற்றால் – இன்பத்
தேன் வந்து பாயும் – இது
தமிழ் வரிகள்
மகிழ்வில் – ஓர் மோகனம்
அழுகின்ற மழலைக்கு
இன்பத் தலாட்டு
காதலிக்கோ
கிறங்க வைக்கும்
கவித்துளிகள் – இவை
அத்தனையும்
தமிழ்த் துளிகள்
இன்பத் தேன் துளிகள்

சி. அபினயா
மத்தியவீதி
காரைதீவு -




தமிழ் - Tamil




### கவிதைப்பூங்கா வாசகர்களுக்கு...

தாங்கள் கவிதைப்பூங்காவுடன் கொண்டுள்ள இறுக்கமான பிணைப்பிற்கு என்றும் நன்றிகள். வாசகர்களின் கவிதைகள் நிறையவே குவிகின்றன. இடம் கொடுக்கும் நோக்குடன் கவிதைகளை 16 வரிகளுக்குள் மட்டுப்படுத்துவதுடன் தரமானதாகவும் அனுப்பி வைக்குமாறு வினயமாக வேண்டுகின்றோம்.



# புனைகதைப் புயல்



வாசுகியுடன் வாழந்த அந்தக் காலத்தில், அவனுக்கு இனம் புரியாத சந்தோஷம். தனது இனத்தவர் அவளை வீணாக திட்டி, ஊரை விட்டுக் கலைத்து விட்டார்களே, ஏன் என்னை மட்டும் காப்பாற்றினார்கள்? நான் அன்றே செத்துப் போயிருந்தால், இப்போது இப்படி கவலைப்படவேண்டியதில்லையே, தமிழ் இனத்தைச் சேர்ந்தவள் என்பதினால், ஊரைவிட்டுக் கலைத்தார்களோ? என்றாவது ஒருநாள், அவளை நான் காணுவேன். அப்போது எனக்கு வசந்தம் வீசும். அந்தக் குளத்தங்கரைக்கு நான் தனியே போய், அல்லிப் பூக்களை பறிப்பதனால் என்ன பயன்? வேண்டாம்... வேண்டாம்... அந்தப்பக்கமே போகக்கூடாது. அவள் வாழ்ந்த குடிசை, இடிந்து அடையாளம் தெரியாமலப் போய்விட்டது. சிங்கள மக்களும் என்னைத் திட்டுகின்றார்கள். இந்த நாட்டில் பிறந்து நாம் சிங்களவன், தமிழன், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் எதற்கு? தமிழர் வளர்க்கும் நாய்களும், சிங்களவர் வளர்க்கும் நாய்களும், நான் சிங்களவன், நீ தமிழன் என்று சண்டையா பிடிக்கின்றன? ஏன் எங்கட நாயின் குட்டிகள் கூட, பக்கத்து வீட்டு சுப்பிரமணியத்தின் நாயுடன் கொண்ட காதலால், போட்ட குட்டிகளல்லவா இவை? விலங்குகள், பறவைகள் எல்லாம் இப்படிச் சுதந்திரமாக வாழும்போது, மனிதர்கள் மட்டும் ஏன் இப்படிப்பாகுபாடுகளுடன் சிந்திக்கின்றனர்? ஒவ்வொரு மனிதனும் சரியான வழியில் சிந்திப்பார்களாகில், இந்த நாட்டில் சன்டை ஏது? சச்சரவுகள் ஏது?

'' டேய், மூன்று வருடமாகியும், அவளை இன்னும் மறக்கவில்லையா? எழும்பி வா சாப்பிடுவோம் '' என்று சிங்களத்தில் அங்கலாய்த்தாள் அவனின் தாய்.

தாயின் அங்கலாய்ப்பைக் கேட்டதும், கதிரையில் கனவுகளுடன் தத்துவரீதியாக சிந்தித்துக் கொண்டிருந்த பண்டா, வேண்டா வெறுப்பாக சமயலறையை நோக்கி நகர்ந்தான். அவனால் உணவு உண்ண முடியவில்லை. ஏதோ உயிர் வாழ்வதற்காக, அரைகுறையாக சாப்பிட்டு முடித்தான். வாசுகி, இவனுடன் இல்லாத அந்த நாட்கள் எல்லாம், நிலத்தில் கிடக்கும் ஆகாயத் தாமரையைப் போல் வாடினான். இருந்தும், அவளுடன் வாழ்ந்த சில நாட்களினை ஞாபகப்படுத்துவது, அவனுக்கு அரைகுறையான நீரில் கிடக்கும் ஆகாயத் தாமரையைப்போல், மலர்ந்தும் வாடியும், மலர்ந்தும் வாடியுமாக... அவனது வாழ்க்கை ஓடியது. எங்கோ குளத்தில் முழுமையாகக் கிடக்கும் ஆகாயத்தாமரையைப்போல வருவேன் என்று, தினம் தினம் கனவு காண்பான். எனது மனைவியும், பிள்ளையும் எங்கு இருக்கிறார்களோ, இல்லாட்டி... என்று புலம்பல்களுடன் அவனது வாழ்க்கை துடுப்பில்லாத படகு போல் ஓடியது.

இவனது தாயும் எவ்வளவோ சொல்லிச் சொல்லி, அவனும் இன்னும் திருமணம் செய்யவில்லை. தாய் ஏற்கனவே நோய்வாய்ப்பட்டிருந்தவள். இவனை நினைத்து நினைத்துக் கவலையடைந்து கடைசியில் ஒருநாள் இறந்தே போனாள். தாயின் மறைவின் பின், பண்டா வீட்டையும் விற்றுவிட்டு, நீர்ப்பாசனத் திணைக்களத்தில், அவனுக்காக கொடுக்கப்பட்ட விடுதியில், அடைக்கலம் புகுந்துவிட்டான்.

'' சுசி கடைக்குப்

## ஆகாயத்தாமரைகள்

போய், அரை ராத்தல் பாண் வாங்கிக்கிட்டு வா, நாளைக்கு வெள்ளிக்கிழமைதானே, பின்னேரம் காசு கொடுக்கலாம். கடக்கார அம்மாக்கிட்ட நான் சொன்னேன்னு சொல்லம்மா... போம்மா... போயிட்டு வாம்மா...'' என்று படுக்கையறையில் கிடந்த வாசுகியின் குரல், கரகரப்புடன் ஒலித்தது.

ஆறு வயதே நிரம்பாத சுசி, அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டதும், நத்தை நகர்ந்ததைப் போல வாசற்படியைவிட்டு வெளியில் வந்தாள்.

கடதாசி அட்டைகளை நிலத்தில் விரித்து, கிழிந்த போர்வையினால் உடலை மூடிக்கொண்டாள். மார்கழி மாதம் என்பதனால், அதிகாலைக் குளிர்காற்று, கிழிந்த போர்வையின் துளைகளினூடாகச் சென்று, உடலில் பட்டதும், ''கடதாசிப் பூ காற்றில் ஆடும்'' மெல்லிய மேனி குளிரில் ஆடும், என்ற உவமையழகு இங்கே உண்மையாகியது. பல தடவைகள் கழுவிக் கழுவி, அந்தப் போர்வை சோபை இழந்ததைப்போல, நெளிந்து நெளிந்து காணப்பட்டது.. போர்வையின் இயல்பை அறிந்துகொண்ட நுளம்புகளோ வாசுகியின் குருதியைச் சுவைத்தும், சில நுளம்புகள் மயங்கியும் கிடந்தன . சில நுளம்புகள் ஙொய்.... என்றவாறு பாடிததிரிந்தன. இவை எல்லாற்றுக்கும், வாசுகியினால் உடம்பை அசைத்து தனது விருப்பமின்னையைத் தெரிவிக்க முடிந்ததே தவிர, வேறு அவளால், ஒன்றும் செய்ய முடியவில்லை.

அந்நாட்களை அவளால், இன்றும் மறக்கமுடியவில்லை. அது ஒரு தொடர்கதையாகவே இருந்தது. அப்படி என்னதான் செய்துவிட்டாள்



வாசுகி? பதினெட்டு வயது இருக்கும். அந்தச் சம்பவம் நடந்த நாள், மாத்தளையில் தானும், தனது தாயுடன், தனியான குடிசையில் வாழ்ந்தவர்கள் இவர்கள். தாயின் மறைவிற்குப் பின்னர், வாசுகிக்குச் சொந்தம் என்று எவரும் இல்லை. படிப்பறிவும், அனுபவக்கல்வியும் இல்லாத இவள், அந்தக் குடிசையில், பாலைவனத்தில் திசைமாறி வந்து புகுந்த, ஆட்டுக்குட்டியைப்போல தடுமாறினாள். இப்படியாக தடுமாற்றமும், பட்டினியும் பதினாறு வயதில் இருந்து, இரண்டு வருடங்கள் வாரையில்த் தொடர்ந்தது. அவ் வேளையில்தான், பண்டா என்பவனுடைய நட்பு வாசுகிக்குக் கிடைக்கின்றது.

மாத்தளைப் பிரதேசம் தமிழர்களும், சிங்களவர்களும் சேரந்துவாழும் இடம். தமிழ் - சிங்கள உறவுகள், முறிந்து செல்கின்ற காலப்பகுதியில்தான் வாசுகி - பண்டா நட்புத் தொடங்கி அது பின்னர் காதலாக மலர்ந்தது. வாசுகியின் குடிசையைச்சுற்றி வயல்வெளி, வயல்வெளிக்கு அப்பால், பெரிய குளம், அழகின் இருப்பிடமாக, அக்குளம் காட்சி அளித்தது. களைப்பாறுவதற்கு, மதுரை மரங்கள் வரிசை வரிசையாக செழித்து ஓங்கி வளர்ந்திருந்தன. குளத்து நீருக்கு மேல் பாசி, தாமரை, அல்லி, ஐதரில்லா, ஆகாயத் தாமரை... என பல நீர்த்தாவரங்கள், குளத்தை அலங்காரம் செய்தன. இந்தக்குளந்தான் இருவரையும் இணைத்து வைக்கின்றது. வாசுகிக்கு தமிழ் மட்டுமே தெரியும். ஆனால், பண்டாவோ, மூன்று மொழியும் சரளமாகப் பேசக் கூடியவன்.

அல்லி விதையில் பிட்டு அவித்துச் சாப்பிடுவதென்றால், வாசுகிக்கு தனி விருப்பம். கட்டைப்பாவாடையும், மார்பகங்களை மறைக்க சுற்றிக் கட்டிய துணியுடனும், தன்னந்தனியாக கையில் சிறிய கூடையுடன், குளத்துக்குள் இறங்கி அல்லிப்பூக்களைப் பறிப்பது வழ்மை. நீர்ப்பாசனத்திணைக்களத்தில் வேலைபார்த்த பண்டா, அந்த ஊரில் உள்ள குளங்களை புனரமைக்கும் வேலையினை பொறுப்பேற்றிருந்தான்.

வேலையாட்கள் பலருடன் பண்டா குளத்துக்கு அடிக்கடி வருபவன், எப்போது அவன் வாசுகியைக் கண்டானோ! அன்றிலிருந்து பண்டாவும், சிறிய கூடையுடன் அல்லிப்பூ பறிப்பதற்காக அடிக்கடி வர ஆரம்பித்தான்.

ஒருநாள் மாலை ஐந்து மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. அல்லிப்பூக்களைப் பறித்துவிட்டு, குளத்தில் இருந்து கரையை நோக்கி, நனைந்த உடையுடன், முதுகில் பட்ட குளத்து நீர், முத்து முத்தாக மீண்டும் குளத்தில் விழ, ஈரமான துணிக்குள் இருக்கும் இளமைகள் குளிரால் விறைப்படைந்து, காற்று நிறைந்த பந்தைப்போல துணியைக் கிழித்துக்கொண்டு, வெளியில் வருவதற்கு எத்தனிப்பை பண்டா

## சிறுகதை

இரகசியமாக இரசித்தான். நீரில் சில மணிநேரம் ஊறியதினால், இவளின் பாதங்கள் அற்றலர்ந்த செந்தாமரைப் பூ, மெதுவாக தரைக்கு நடந்து வருவதைப்போல இருந்தது. இதையெல்லாவற்றையும் பார்த்து இரசித்துக்கொண்டிருந்த பண்டா, பொறுக்க முடியாமல் அவளுக்கு முன் ஓடிச்சென்றான். முன்னரே ஒருமாத காலமாக அறிந்திருந்த இவனை, எதற்காக வந்திருப்பான் என்று ஓரளவு புரிந்துகொண்டாள் வாசுகி.

சம்பாசணையை பண்டா ஆரம்பித்தான்.

இஞ்ச உங்க... பெயரென்ன?

பதிளில்லை.

மீண்டும் பண்டா '

சொல்லுங்க... ப்ளீஸ் உங்க பெயரென்ன...?

மருத மரத்தின் பட்டைகளை ஒரு கையால் உரித்தவாறு, மற்றைய கையில் அல்லிப்பூக் கூடையை வைத்துக்கொண்டு குளத்தை நோக்கியவாறு...

'' ஏன் இப்ப உங்களுக்கு எண்ட பேர்...? '' ''சும்மா சொல்லுங்களன்'' பண்டா தொடர்ந்தான் . ''எண்ட பேர் வாசுகி...'' என்று நாணத்தால், பனித்துளிகளை உடல் எங்கும் தாங்கிய நாணல் புல்லினைப் போல நெளிந்து வளைந்தவாறு பதிலளித்தான். அன்று நட்பாக மட்டுந்தான் இருவருடைய தொடர்பு காணப்பட்டது. போகப்போக அது காதலாக மாறியது. பண்டாவுக்கும் வாசுகிக்கும் சில காலம், அந்தக் குளத்தங்கரை, காதல் பூங்காவாக மாறியது. இருவருக்கும் காதல் ஏற்பட்டு ஒருவருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. அந்த ஒரு வருடத்தில், இருவருக்குமிடையில் எந்த வித நெருக்கமான தொடர்புகளும் இருந்ததில்லை. குளத்துக்கு நன்றி கூறுமுகமாகவும், தங்களின் உண்மையான காதல் ஆரம்பித்து ஒருவருட நிறைவை கொண்டாடுவதற்காகவும், மாலை நான்கு மணியளவில் குளத்தை நோக்கி இருவரும் சென்றனர்.

தொடரும்...

ஆக்கம்:-
புயல்.
பூந்தோட்டம்.

# ஆன்மீக உலகம்

## இந்துக்களின் விவாக நடைமுறைகள்



விவாகம் என்றால் பிணைப்பு அல்லது திருமணம். அதாவது ஒருவருடன் இன்னொருவரை அதாவது ஓர் ஆணுடன் ஒரு பெண்ணை இவ்வாழ்க்கைக்குத் துணைவியாக்கி வைப்பதே விவாக நடைமுறையாகும்.

விவாகங்களில் பல வகைப்படும். அவை பிராஹ்மயம், தைவம், ஆர்ஷம், பிரஜாபத்யம், அஸ ுரம், கந்தர்வம், ராஷஸம், பைசாஸம் என எட்டுமாம்.

**பிராஹ்ம்யம்** :- நல்லதொரு பண்பான குடும்பத்தில் உதித்த பிள்ளையை, வரனாகத் தேர்ந்தெடுத்து, அவனை சகல அலங்காரங்களும் செய்வித்து, விதிப்பிரகாரம் நல்லதொரு கன்னிகையைக் கன்னிகாதானமாகக் கொடுப்பதாகும். இதனையே இப்போது யாவரும் கடைப்பிடிக்கின்றனர். புரோகிதர்களும் இதனையே பெரும்பாலும் முன்னின்று நடத்துகின்றனர். பிராமணர்களுக்கு இவ்வகைத் திருமணமே முக்கியமானதாகும்.

**தைவம்** :- யாகம் செய்யும் ஓர் நற்புருஷனுக்கு ஓர் குணவதியை சகல ஆபரணங்களாலும் அலங்கரித்து நிறைய சொத்துக்களுடன் யாகம் செய்யும்போது தட்சணையாகக் குறித்த கன்னிகையைக் கொடுப்பதே தைவவிவாகம் ஆகும்.

**ஆர்ஷம்** :- யானையைப்போல அழகுள்ள காளையையும் அழகுள்ள இரு பசுக்களையும் பெற்றுக்கொண்டு தன் பெண்ணை விதிப்படி கன்னிகா தானம் செய்து கொடுப்பது ஆர்ஷ திருமணம் என்பதாகும்.

**பிரஜாபத்யம்** :- இரு தரப்பினரும் கூடி ஒன்று சேர்ந்து, பேசிமுடித்து சன்மார்க்கங்களையும், சத்கர்மாக்களையும் நல்ல முறை யில் அனுஷ்டிக்கப்பிரதிகளைகக் கொண்டு அதாவது தம்பதிகளைப் பார்த்து நீங்களிருவரும் தர்மத்தைக் குறைவின்றி அனுஷ்டியுங்கள் என ஆசிர்வதித்து, பூஜித்துத் தன் பெண்ணை மாப்பிள்ளையிடம் தானம் கொடுப்பது, பிரஜாத்யம் எனப்படும்.

**அஸுரம்** :- மண மகன் தான் மணம் செய்ய உள்ள கன்னிகையின் தந்தைக்கும் மணமகளின் பந்துக்களுக்கும் தன்னாலியன்ற பொன் பொருள் ஆகியவற்றைத் தானமாக கொடுத்து அக்கன்னிகையை விவா கம் செய்து கொள்வது அஸுரம் எனப்படும்.


**கந்தர்வம்** :- ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி பரஸ்பரம் சந்தித்து உள்ளன்புடன் நேசித்து பிரேமையின் பாசத்தால் கட்டுண்டு ஒருவரை ஒருவர் பிரியாதிருக்க எடுத்த சபதம் சந்தர்ப்பவசத்தால் நிறைவேறாது போனாலும் (அதாவது தெய்வ சங்கல்பத்தால் பிரிந்து பின் மீண்டும் தெய்வ சங்கல்பத்தால் இணையவும் நேரிடலாம). புலன் இன்பத்தை முழுமையாக மனம் திறந்த அளவில் ரசித்து அனுபவித்த பின், மனம் திருப்தியுற்று காம உணர்வைத் துறக்க, உதவி செய்கின்றது இது அனுபவத்தால் தான் சாத்தியம்.

**ராஷஸம்**:- யுத்தங்களினாலும், சண்டை சச்சரவுகளினாலும் பலர்த்காரத்துடன், பெண்ணின் விருப்பமின்றி அவளது உறவினர்களிடம் இருந்து, பெண்ணைக் கவர்ந்து கொண்டு சென்று செய்யும் விவாக முறையே ராசஷவிவாகமாகும்.

**பைசாஸம்** :- திருட்டுத் தனமாக, ஒரு பெண் தூங்கும்போதோ அல்லது சுயநினைவற்றுக் கிடக்கும் போதோ, அவளுக்குத் தெரியாமல் அவளைத் தன் மனைவியாக்குதல், பைசாஸ விவாக முறை ஆகும்.

**– காரையூர்க்கிழார் சரோஜினி –**

## சமுதாய வாழ்வில் மார்க்கத்தின் தாக்கம்.



இறை நம்பிக்கை யின்மையானது, மனித வர்க்கத்தின் மீதும், சமுதாயங்கள் மீதும், பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. மார்க்கத்திலிருந்து அகன்று, அல்லது அதைப் புறக்கணித்து வாழும் சமுதாய மக்களிடையே அநீதியும், தன்னலமும், ஒருவரை ஒருவர் நம்பாத நிலையுமே, நிறைந்து காணப்படும். இறை நம்பிக்கையற்ற சமுதாயங்களின் இயல்பும், இவ்விதமே காணப்படுவது, தவிர்க்க முடியாத ஒன்று.

மார்க்க நடைமுறை களும், பண்புகளும் தான் தனி மனிதர்களுடையவும் சமுதாயங்களுடையவும் ஒழுக்க மேம்பாட்டை, உறுதி செய்யத்தக்கவை. இறைவன் மீதும், மறுமையிலும் நம்பிக்கையுடையவர்கள். இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகவே வாழ்வதால், பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். இறைவனுக்குப் பயந்து மிக்கக் கவனத்துடன் தீய செயல்களைத் தவிர்த்துக்கொள்வார்கள். இறைவன் விரும்பாத மனப்பான்மையையும், நடத்தையையும் விலக்கிக் கொள்வார்கள். இத்தகைய மக்களைக் கொண்ட சமுதாயம் பிரச்சினைகளுக்கு உள்ளாகாது.

இறை நம்பிக்கையின்மைக்கு இலக்கானவர்கள், இங்கே இவ்வுலகில் வாழ்ந்திருக்கும் போதே தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் தங்களுடைய இதயங்களில் மார்க்க நற்பண்புகளைப் பேணி நடக்க வேண்டும், என்ற உணர்வுடையவர்கள் இல்லாமல் இருக்கமுடியாது. ஒவ்வொரு மனிதனும் மனச்சாட்சியுடனேயே படைக்கப்பட்டுள்ளான். இறை நம்பிக்கையாளர்களிடம் இந்த அமைப்பு மிகுந்த இணக்கத்துடன் இயங்குகிறது. மார்க்கப் பண்புகளைப் பேணாதவர்களிடம், இது நேராகச் சீராக இயங்குவதில்லை.


இதை வேறு விதமாகக் கூறுவதானால், மனச்சாட்சிக்கு இசைந்து நடக்காதவர்கள், மார்க்கப் பண்புகளை விட்டு அகன்று, ஆன்மீக அவலங்களுக்கு உள்ளாகிறார்கள் என்று சொல்லலாம். ஒவ்வொரு மனி தனும் உண்மையில் அவனைப் படைத்த ஒருவன் உண்டு என்றும் அவனிடம் நாம் கணக்குக் கொடுத்தாக வேண்டும் என்றும், ஒழுக்கத்தில் மேம்பாடும் நிறை வும் உடையவர்களாக வாழ வேண்டும் என்றும், அறிந்தவர்கள் தாம், ஆனால் இந்த உண்மைகள் எல்லாம் அவனுடைய, இவ்வுலக ஆசாபாசங்களோடு முட்டி மோதுகின்றவையே.

இதனால் தான் தனி மனிதர்கள் ஒன்று முழுமையாக மார்க்கத்தை நிராகரித்து விடுவார்கள். அல்லது நான் நேர்மையானவன் நல்லவன் என்று கூறி, குர்ஆனின் அறிவுரைக்கு உகந்து வாழாமல் இருப்பதற்கு சாக்குப் போக்குச் சொல்வார்கள். ஆனாலும் இந்த இரு சாராருமே உண்மையில் உள்ளுக்குள், இறைவன் அங்கீகரிக்கும் முறையில் வாழ வேண்டும் என்பதை அறிவார்கள். மார்க்கப் பண்புகளை உதாசீனப்படுத்தி வாழும் சமுதாயங்களில், காணப்பெறும் மனவேதனைக்கும் உளவியல் ரீதியான, மற்றும் ஆன்மீக அவலங்களுக்கும் காரணம், இந்த ஆன்மீகத் தளர்வுதான். இதை மனச்சாட்சியின் வேதனை என்கிறோம்.

மனச்சாட்சியின் வேதனை என்பது, இறை நம்பிக்கையற்றவர்கள் மறுமையில் நுகரவிருக்கும், தாங்க முடியாத ஆன்மீகத் துயரத்தில், ஒரு சிறிய பகுதியே ஆகும். மனிதன்

இவ்வுலகில் துன்பம் அனுபவிப்பதற்குக் காரணம். அவன். தான் படைக்கப்பட்ட நோக்கத்திற்கு நேர்மாறான. மனப்பான்மையையும், கண்ணோட்டத்தையும், வாழ்க்கை நெறியையும் மேற்கொள்வதுதான். மார்க்கத்திற்கு முரணான மனப்பான்மையும், நடத்தையும், உடையவனாக விளங்கும் காலம் வரை, மனிதன் இவ்வுலகில் ஆன்மீக அவலத்திற்கு உள்ளாகியே தீர்வான். இதனால் தான் அவன் தன் மனச்சாட்சியின் குரலை, அடக்கி ஒடுக்க முயல்கின்றான். அதன் மூலம் தன் வேதனையை நீக்க விழைகின்றான். இந்தக் குழப்பங்கள் எல்லாம் மனித வரலாற்றில், மானிடர் மீது இந்தக் குழப்பங்களை எல்லாம் நீக்குவதற்கு உரிய ஒரு வழி மார்க்கப் பண்புகளைப் பேணி நடப்பது தான்.

## உலகமும் அதன் அழிவும் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக"




இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு என்னும் இரட்சகர் யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும், தாவீதின் ஊரில் பிறந்தார். உன்னுடைய பாவத்திற்காக மட்டுமல்ல. சகல ஜனங்களின் பாவத்திற்காகவும், தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி தன் ஜீவனை சிலுவையில் விட்டார். அவர் எங்களுக்காகவே இரத்தஞ் சிந்தினார். ஈட்டியால் குத்தப்பட்டார். முள்முடி தரிக்கப்பட்டு, நிந்தைகள் அவமானங்கள் எல்லாவற்றையும் சகித்தார். அவர் சிலுவையில் மரித்து மூன்றாம்நாள், உயிரோடே எழுந்தார். அவர் எங்கள் யாவருக்காகவும், யாவற்றையும் செய்து முடித்தார்.

இயேசு கூறினார் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என்றார். நாம் இயேசுவை விசுவாசித்து, அவரில் மட்டும் நம்பிக்கை உள்ளவர்களாக, அவருக்காக ஜீவிப்போமாகில், இனி இவ்வுலகத்தில் சம்பவிக்கப்போகின்றதான, சகல விதமான ஆபத்துக்கள், பயங்கரங்கள், எல்லாவற்றிலுமிருந்து நம்மைப் பாதுகாப்பார் என்பது நிச்சயமே. பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே, வானமும் பூமியும், உண்டானது. அப்பொழுது இருந்த உலகம் ஜலப் பிரளயத்தினாலே அழிந்து போனது. மனதார அறியாதிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானமும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள், நியாயம் தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் க்ாக்கப்பட்டிருக்கிறது (11 பேதுரு3:5,7)

இயேசு இவ்வுலகத்தில் இருந்தபோது. தம் சிஷ்யர்களுக்கு, உலகத்தின் அழிவுகளைக் குறித்து தீர்க்கதரிசனமாகக் கூறினார். யுத்தங்கள், பஞ்சங்கள் கொள்ளை நோய்கள் இவைகள் எல்லாம் கடைசிக் காலத்தில் சம்பவிக்கும், ஆனாலும் முடிவு உடனே வராது. இவைகள் எல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் என்று கூறினார்.


யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், பூமி அதிர்ச்சிகள், எல்லாம் அன்றும் நடந்தன. அவை இன்றும் இன்னும் அதிகரிப்பதே, இயேசுவின் வருகைக்கு அடையாளமாக உள்ளது. இயேசு கூறினார் இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன். என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (மத்தேயு 28:20)

இவ்வுலகம் அழியும் என்று நீ கலங்கத்தேவையில்லை. உனக்குத்தேவன் கிருபையாய் இரங்கி, இந்த நாட்களைக் கூட்டிக்கழித்து உன்னை ஜீவனோடு வைத்திருப்பது, நீ அவரை ஏற்றுக்கொள்வதற்காக. உனக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும், ஒரே ஒரு வாழ்க்கைதான். மனிதன் ஒரு தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும், அவனுக்கு நியமிக்கப்பட்டுள்ளது. (எபிரேயர் 9:27)



# அறிவியல் உலகம்

## போன் ரீசார்ஜ் அட்டையை நகத்தால் சுரண்ட வேண்டாம்.




பொதுவாக நாம் போன் ரீ சாஜ் கார்ட்களை வாங்கினதும் அவற்றின் இரகசிய இலக்கத்தை அறிய நகங்களால் சுரண்டுகிறோம். இதனை கட்டாயம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஏனெனில் இது தோல் புற்றுநோயை ஏற்படுத்தும். ஐக்கிய அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சிநிலையம் வெள்ளி நைட்ரோ ஆக்சைடில் மனிதர்களுக்கு புற்றுநோய் ஏற்படுத்தும் நோய் கிருமிகள் உள்ளதைக் கண்டறிந்துள்ளது.

எனவே சுரண்டும் வடிவில் உள்ள ரீ சார்ஜ் அட்டையையோ அல்லது வேறு எந்த ஒரு சுரண்டல் அட்டையையோ சுரண்ட நகங்கள் பயன்படுத்த வேண்டாம். ஏனென்றால் அது வெள்ளி நைட்ரோ ஆக்சைடு மூலம் முலாம் செய்யப்படுகிறது. இது நமக்கு தோல் புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

## குரல் கட்டளைகள் மூலம் இயங்கும் புதிய கணனி



குரல் கட்டளைகள் மூலம், விண்டோஸ் கணனிகளை, தொடுதிரை யின் மூலம் கணனிகளை இயக்கும் தொழில்நுட்பத்திற்கு அடுத்தபடியாக, குரல் கட்டளைகள் மூலம் அவற்றினை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம், புதிய பரிமாணத்திற்குள் இன்று காலடி எடுத்து வைத்துள்ளது.

இதன் அடிப்படையில், தற்போது விண்டோஸ் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட, கணனிகளில் காணப்படும் அப்பிளிக்கேஷன்களை செயற்படுத்துவதற்கு, Responding Heads - 4 எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மென்பொருளினை, கணனியில் நிறுவிக்கொண்டு, நுணுக்குப்பன்னி (Microphone) மூலம், குரல் வழிக்கட்டளைகளை வழங்குவதன் ஊடாக, ஏனைய அப்பிளிக்கேஷன்களை இயக்கக்கூடியவாறு காணப்படுகின்றது. உதாரணமாக: Outlook Express - இனை Open Mail எனும் கட்டளையை வழங்குவதன் மூலம் செயற்படுத்த முடியும்.


## நாம் உணவு உட்கொண்ட பின்பு தூக்கம் வருவது ஏன் தெரியுமா?



இது உடலின் குருதிச் சுற்றோட்டத்திலேயே தங்கி உள்ளது. உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் குருதி ஒரு குறிப்பிட்ட விகிதத்திலேயே செல்கிறது. ஆனால் நாம் உணவு உட்கொண்டதும் இந்த விகிதம் மாறுபடுகிறது. நாம் உணவு உட்கொண்டதும் இரைப்பையின் தொழிற்பாடு துரி தடைவதால், அந்தப் பகுதிக்கு குருதி அதிகம் தேவைப்படுகிறது.

ஆகையால் மூளைக்குச் செல்லும் குருதியின் அளவு குறைவடைகிறது. இதனால் மூளையின் செயற்பாட்டுத் திறனும் குறைவடையும். இதனாலேயே உணவு உட்கொண்டதும் ஒரு வித மந்த நிலை ஏற்படுகிறது. உணவு உட்கொண்டதும் தூக்கம் வர இதுவே காரணம்.

## மனித ஆயுளை இரத்தப் பரிசோதனையால் அறியலாம்.



இரத்தப்பரிசோதனையின் மூலம் நாம் எவ்வளவு ஆண்டு உயிரோடு இருப்போம் என்பதை தீர்மானிக்கும் புதிய சர்ச்சைக்குரிய பரிசோதனையை ஆய்வாளர்கள் செய்துள்ளனர். எவ்வளவு வேகத்தில் நம் உடல் உறுப்புக்கள் முதுமையடைகின்றன என்பதை ரத்தப்பரிசோதனை மூலம் கூறிவிட முடியும் என்கின்றனர் இந்த ஆய்வாளர்கள். குரோமோசோம்களின் முடிவில் உள்ள டெலோமியர்ஸ் என்ற நுண் அமைப்புகளின் நீளத்தைக் கணக்கிடுவதன் மூலம் ஆயுட்களைக் கணித்து விட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது செல்கள் பிரியும்போது குரோமோசோம்களை சிதையாமல் பாதுகாக்கும் டெலோமியர்ஸின் நீளத்தை கணக்கிடுவதன் மூலம் இந்தப் பரிசோதனை செய்யப்படுகிறது.

ரத்த செல்களில் டெலோமியர்ஸ்களின் அளவு குறைவாக எவ்வளவு டெலோமியர்ஸ்கள் உள்ளன என்பதைப் பொறுத்து ஆயுளைக் கணித்து விட முடியும் என்கின்றனர். இந்த லண்டனைச் சேர்ந்த ஆய்வாளர்கள். ஏற்கனவே நூற்றுக்கணக்கான பிரிட்டன்வாசிகள் இந்த பரிசோதனையை செய்து கொண்டுள்ளதாக தி இன்டிபெண்டன்ட் கூறியுள்ளது. காப்பீட்டு நிறுவனங்கள் வசதிக்கேற்ப இந்த புதிய பரிசோதனை அநேகமாக வாழ்வின் இன்றியமையாத டெஸ்ட் ஆகிவிடும் என்கின்றனர் இந்த ஆய்வை நடத்திய நிறுவனத்தினர். இன்னும் கூறப்போனால் கொலஸ்ரோல் டெஸ்ட் அளவுக்கு இதுவும் இன்றியமையாததாக மாறிவிடும் என்கிறார் ஆய்வை நடத்திய அதி காரியான ஸ்டீபன் மாட்லின்

## முள்ளங்கியின் மருத்துவ குணங்கள்.




வெள்ளை முள்ளங்கி மருந்தாகவும், உணவாகவும் சாப்பிட ஏற்றது. சிவப்பு முள்ளங்கியை பொறுத்தவரை கிழங்கு, இலை மற்றும் விதை மூன்றுமே மருத்துவ குணமுள்ளவை.

வெள்ளை முள்ளங்கியில் ஒரு வித வாசனை வருவதற்கு கந்தகமும், பொஸ்பரசும் இருப்பதே காரண-மாகும். பச்சிளம் குழந்தைகளைத் தாக்கும் ஜலதோஷம், வயிற்றுப் பிரச்சினைகளுக்கு, முள்ளங்கிப் பிஞ்சு சாறு நிவாரணம் அளிக்கும்.

இட்லி வேகவைப்பது மாதிரி முள்ளங்கிப்பிஞ்சை, ஆவியில் வேக வைத்து, அதில் இருந்து சாறு எடுத்து பாலாடையில் வைத்து குழந்தைகளுக்கு ஊட்டலாம். இப்படிச் செய்தால் மலச்சிக்கல், சளித்தொல்லை போன்ற பிரச்சினைகள் இருக்காது. சிறுநீர்ப்போக்கு இயல்பாக இல்லாமல் இருப்பது, சிறுநீர்ப் பாதையில் பிரச்சினை உள்ள பெரியவர்களும், இந்த முள்ளங்கிச் சாற்றைக் குடிக்கலாம்.

உடல் உஷ்ணத்தைத் தணிக்க வல்லது, இது வயிறு சம்பந்தப்பட்ட கோளாறுகளையும் நீக்க வல்லது. குடலில் புண் இருந்தாலும் அதை ஆற்றி விடும், நீரிழிவு, நரம்பு தளர்ச்சிக்கும் மிக நல்லது.

## இதய நோய்களை கட்டுப்படுத்தும் தக்காளி மாத்திரைகள்



இதய நோய்களை கட்டுப்படுத்தக்கூடிய தக்காளி மாத்திரைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ரத்த குழாய்களில் கொழுப்பு படிவதன் காரணமாக ரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனால் மாரடைப்பு உள்ளிட்ட இதய நோய்கள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் இதய நோய்களை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தக்காளி மாத்திரைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து விஞ்ஞானிகள் கூறுகையில் தக்காளியின் மேற்பரப்பில் உள்ள லிகோபின் என்ற இரசாயன பொருளை கொண்டு மாத்திரைகள் தயாரிக்கப்படுகிறது.

இவைகள் தமனி ரத்த குழாய்களில் படியும் கொழுப்பை அகற்றி விரிவடைய செய்கிறது. என்று தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மாத்திரையை தினமும் உட்கொண்டால் இதய நோய்களின் பாதிப்பின்றி வாழ முடியும் என்றும் நீரிழிவு மற்றும் புற்றுநோய் ஏற்படாமலும் தடுக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## முதியவர்கள் இளமையாக இருக்க...

1. காலையில் விளாம்பழத்தை உண-வுடன் சேர்த்துக் கொள்ளுதல், மதியம் வேர்க்கொம்பு அவித்து ஆவி பிடித்தல் வேண்டும், மாலை வேளை கடுக்காய் தோல் சீவி தோலை அவித்துக் குடித்தால் வயோதிபர் தன்மை போய் இளமையாவர்.

2. முற்றிய மிகப் பழைய வேம்பின் பூ , பிஞ்சுப்பட்டை (சிவப்புப் பகுதி), துளிர், காய் இவற்றை நிழலில் உலர்த்தி, இடித்து துணியால் அரித்து எடுத்து, சம பங்காகக் கலந்து, 40 நாட்களுக்கு மேல் தொடர்ந்து காலை, மாலை மூன்று விரலால் எடுத்து உண்டு வர, நோய்கள் அகன்று முதியவர் இளமையாவர். இத்துாளில் இதரை வாழைப்பழத்தைப் புதைத்து வைத்தால் 40 நாட்களில் பழம் காயாக மாறும்.

**சூடு உடம்புக் காரர்கள்**

அதிகாலை வெறுவயிற்றில், சிறிதளவு வெந்தயம் வாயில் இட்டு, தண்ணீர் குடித்து வர உடல் சூடு தணியும். செம்புப் பாத்திரத்தில், படுக்கைக்குச் செல்லும் போது நீரை வைத்திருந்து, காலையில் நித்திரை விட்டெழுந்ததும் அந்நீரைக் குடித்தால் உடம்புச்சூடு, நோ, அலுப்பு எல்லாமே அகன்றுவிடும்.

**சிலவகை எக்சிமா**

ஆண்பனை மரத்தின் அடியை, வாய்பேசாது குலதெய்வத்தை வேண்டி, கையால் குத்தி அதில் வரும் சாற்றைத் தொடர்ந்து பூசிவர எக்சிமா மாறும்.

**சிலதை தோல் வியாதிகள்**

அறுகம்புல்லைக் கழுவியெடுத்து, பாலுடன் சேர்த்து உண்டுவர, சில நாட்களில் தோல் வியாதிகள் மாறும். மிகப் பழைய பூவரசம் மரத்தின் (மேல்ப்பட்டை நீக்கி) சிவப்புப் பகுதியை எடுத்துக் காய வைத்து, இடித்துத் தூ ளாக்கி காலை மாலை வெந்நீரில், மூன்றுவிரலால் எடுத்து 40 நாட்களுக்குக் குறையாது உண்டுவர, தோல் வியாதிகள் மறையும்.

**காய்ச்சல் குடிநீர்**

மிளகு, கடுகு, மல்லி, வேர்க்கொம்பு, சீரகம், சமபங்கு எடுத்து அவித்துக் குடித்தால், சாதாரன காய்ச்சல் குண-மடையும். இவற்றைத் தூளாக்கி இடித்து தேநீர், கோப்பியுடன் பருகலாம். இக்காய்ச்சல் குடிநீர் சரக்குடன் வேப்பிலை அல்லது வேப்பம் பட்டை, துளசி இலை அல்லது தூதுவளை போன்றவையும் சேர்த்து அவித்துக் குடிக்க இது காய்ச்சலுக்கு இதமாக அமையும்.


**இருமல்**

தேசிக்காய், அல்லது நாரத்தங்காய், அல்லது தோடங்காயின் சாரைப் பிளிந்தெடுத்து, அதிலுள்ள விதைகளை நீக்கி, தண்ணீர் கலக்காது, அந்தச் சாற்றில் சீனி, அல்லது கற்கண்டு போட்டு பாணிபதத்தில், காய்ச்சி எடுத்து, சேமித்து வைத்து, ஒவ்வொரு நாளும் அருந்திவர இருமல் இருந்த இடம் தெரியாமல் நீங்கும்.

**தொய்வு**

வாய் அகன்ற போத்தலில், 4 அல்லது 5 கோழி முட்டைகளைக் கோதுடன் வைத்து, அதை மூடி நிரம்பியிருக்கும் வகையில், தேசிக்காயைப் பிழிந்து தண்ணீர் கலக்காமல் விட்டு, அதை அசையாமல் ஓர் இடத்திலே 10..15 நாட்களுக்கு வைத்து, பின்னர் எடுத்து நன்கு அடித்துக் கலக்க கோதுகள் எல்லாம் கூழாக வரும். அதன் பின் மேலே மிதக்கின்ற கழிவுகளை எடுத்து விட்டு, சமபங்கு சுத்தமான தேன் கலந்து, அருந்திவர தொய்வு சில நாட்களில் குணம் தெரியும். முட்டை பாவிக்காதவர்கள்.......

# விளையாட்டு உலகம்



## மும்பை அணியில் சச்சின் மகன் அர்ஜுன்



14 வயதுக்கு உட்பட்டோருக்கான மும்பை அணியில் இந்திய அணியின், ''மாஸ்டர்'' பேட்ஸ் மேன் சச்சினின் மகன், அர்ஜுன் டெண்டுல்கர் இடம் பிடித்தார்.

இந்திய அணி யின் ''மாஸ்டர்'' பேட்ஸ்மேன் சச்சின், 39. இவரது மகன் அர்ஜுன் டெண்டுல்கர், (13) இவர், ஆமதாபாத்தில், ஜன.20ஆம் தேதி முதல் பிப்.1ஆம் தேதி வரை நடக்கவுள்ள, 14 வயதுக்கு உட்பட்டோருக்கான மேற்கு மண்டல லீக் தொடரில், மும்பை அணிக்காகக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் மும்பையில் நடந்த 14 வயதுக்கு உட்பட்டோருக்கான, அணி தேர்வுக்கான பயிற்சியில் சதம் அடித்தார். ஏற்கனவே இவர், கோரெகான் சென்டர் அணிக்கு எதிரான போட்டியில் ஜீனியர் சதம் (124 ரண்கள், 14 பவுண்டரி, ஒரு சிக்சர்) அடித்து, கார் ஜிம்கானா அணியை பைனலுக்கு அழைத்துச் சென்றார். இடது கை பேட்ஸ்மேனான இவர், 2011 ஆண்டில், முதல் முறையாக தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றார்.

## ஓய்வு பெறுகிறார் பால் ஹாரிஸ்.



தென் ஆப்ரிக்காவின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் பால் ஹாரிஸ், இந்த ஆண்டு இறுதியில், ஓய்வு பெற ப்போவதாக அறிவித்துள்ளார். தென் ஆப்ரிக்காவின் சுழற்பந்து வீச்சாளர் பால் ஹாரிஸ், (34). கடந்த 2007, ஜன. 2இல், இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், அறிமுகம் ஆனார். இதுவரை 37 டெஸ்டில் பங்கேற்ற இவர், 103 விக்கெட்டுகளைக் கைபற்றியுள்ளார்.

தவிர, 3 ஒருநாள் போட்டியில் 3 விக்கெடடுக்களைக் கைப்பற்றியுள்ளார். கடந்த 2008 இல், இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான, டெஸ்ட் தொடர்களில் அசத்திய இவர் கடந்த 2011இல், இந்திய அணிக்கு எதிரான, டெஸ்ட் தொடரில், தனது இடத்தை சகவீரர் இம்ரான் தாகிரிடம் பறிகொடுத்தார்.

அதன் பின் உள்ளுர் போட்டிகளில் (டைடன்ஸ், லயன்ஸ் அணிகள்) மட்டும் பங்கேற்றுவரும் இவர், இந்த ஆண்டு இறுதியில், எல்லா விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும், ஓய்வு பெற போவதாக அறிவித்துள்ளார்.

## கோப்பை வெல்ல இந்தியாவுக்கு வாய்ப்புள்ளது



''இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை வெல்ல, இந்திய அணிக்கு அதிக வாய்ப்புள்ளது,'' என, இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன், ஜெப்ரி பாய்காட் தெரிவித்தார்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இதற்குத் தயாராகும் விதத்தில் இங்கிலாந்து அணி, இந்தியா ''ஏ'' மற்றும், டில்லி அணிகளுக்கு எதிராக பயிற்சி போட்டிகளில் விளையாடியது.

இந்த இரண்டிலும் தோல்வியடைந்த இங்கிலாந்து அணி, ராஜ் கோட்டில் நடக்கும், முதல் ஒருநாள் போட்டியில் இந்தியாவை எதிர்கொள்கிறது. அதே நேரம், இந்திய அணி பாகிஸ்தானுக்கு எதிரான, டில்லி போட்டியில் வெற்றி பெற்ற உற்சாகத்தில் களம் காணுகிறது.

**இது குறித்து ஜெப்ரி பாய்காட் கூறியது:**

இந்திய அணியை வீழ்த்துவது என்பது, கடுமையாக இருக்கும் என்று நினைக்கவில்லை. அதேநேரம், சொந்த மண்ணில் விளையாடுவதால், சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும். ஏனெனில், இந்திய அணியில் கேப்டன் தோனி, விராத் கோஹ்லி என, இன்னும் தரமான வீரர்கள் பலர் உள்ளனர். சரியான முறையில் திட்டமிட்டு முயற்சி செய்தால், இந்திய அணித் தொடரை வெல்ல 60 சதவீத வாய்ப்புள்ளது.

மற்றபடி சமீபத்திய தோல்விகளால் இந்திய அணி வருத்தம் கொள்ளத் தேவையில்லை. ஜாகிர்கான் இல்லாத நிலையில் ஒருசில வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்டு வர இந்தியா முயற்சிக்கிறது. அதேபோல, உள்ளூர் போட்டியில் உலக சாதனை படைத்த ரவிந்திர ஜடேஜாவை, முக்கிய சுழற்பந்து வீச்சாளராக தயார் படுத்தி வருகின்றனர்.

டிராவிட், சசிசின் ஓய்வு பெற்ற நிலையில், அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள 2015 ஒரு நாள் போட்டி உலக கோப்பை தொடருக்கு அணியை இப்போது தான் உருவாக்க வேண்டும். இதற்காக புதிய வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதில் தவறில்லை. பாகிஸ்தானுக்கு எதிராகத் தோற்றது, ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்திருக்கும். விளையாட்டில் இதுவெல்லாம் சகஜம். இவ்வாறு ஜெப்ரி பாய்காட் கூறினார்.

பலத்த பாதுகாப்பு

நாளைய போட்டிக்கு 1300 பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இதுகுறித்து ராஜ்கோட் ரூரல் எஸ்.பி., பிரேம்வீர் சிங் கூறுகையில், ''பொலிசார் நான்கு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பணியில் ஈடுபட உள்ளனர். போட்டி குறித்து செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள.500 பேர் வருவர் எனத் தெரிகிறது. இவர்களுக்கும் தனியாக பாதுகாப்பு செய்யப்படும்,''

## ரஞ்சி கோப்பை: அரையிறுதியில் மும்பை அணி




ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின் அரையிறுதிக்கு, முதல் இனிங்சில் பெற்ற முன்னிலை அடிப்படையில் மும்பை, சவுராஷ்டிரா, பஞ்சாப் அணி கள் தகுதி பெற்றன.

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின், காலிறுதிப் போட்டிகள், நாட்டின் முக்கிய நகரங்களில் நடக்கிறது. மும்பை, பரோடா அணிகள் விளையாடுகின்றன. முதல் இனிங்சில் மும்பை அணி, 9 விக்கெட்டுக்கு 645 ஓட்டங்கள் எடுத்து ''டிக்ளே'' செய்தது. மூன்றாம் நாள் முடிவில், முதல் இனிங்சில் பரோடா அணி, 5 விக்கெட்டுக்கு 167 ஓட்டங்கள் எடுத்திருந்ததுது.

10.01.2013 அன்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. அம்பதி ராயுடு (89) கை கொடுக்க, முதல் இனிங்சில் பரோடா அணி, 271 ஓட்டங்கள் எடுத்தது. பின், 2 வது இனிங்சைத் துவக்கிய மும்பை அணிக்கு வாசிம் ஜாபர் (33) ஓட்டங்களையும், பின் இணைந்த, கவுஸ்துப் பவார் (70*), ஹிகன் ஷா (65*) கை கொடுத்தார்.

ஆட்ட நேர முடிவில், 2வது இனிங்சில் மும்பை அணி ஒரு விக்கெட்டுக்கு 171 ஓட்டங்களை எடுத்து, 545 ஓட்டங்கள் முன்னிலை வகித்திருந்தது. இப் போட்டி ''டிரா'' வில் முடிய அதிக வாய்ப்பு உள்ளது. முதல் இனிங்சில், பெற்ற முன்னிலை அடிப்படையில், மும்பை அணியின் அரையிறுதி வாய்ப்பு உறுதியானது.

புஜாரா ''200'' : ராஜ்கோட்டில் நடக்கும் காலிறுதியில் சவுராஷ்டிரா, கர்நாடகா அணிகள் மோதுகின்றன. முதல் இனிங்சில் சவுராஷ்டிரா 469, கர்நாடகா 396 ஓட்டங்கள் எடுத்தன. பின் 2வது இனிங்சை துவக்கிய சவுராஷ்டிரா அணிக்கு, புஜாரா (261*) இரட்டை சதம் அடித்து கைகொடுத்தார்.இது ராஜ்கோட் மைதானத்தில் இவரது 2 வது இரட்டை சதம்.

முன்னதாக மத்திய பிரதேச அணிக்கு எதிரான, ரஞ்சிக் கோப்பை லீக் போட்டியில், இரட்டை சதம் அடித்தார். நான்காம் நாள் ஆட்டநேர முடிவில், 2வது இனிங்சில் சவுராஷ்டிரா அணி, 3 விக்கெட்டுக்கு 463 ஓட்டங்கள் எடுத்து, 536 ஓட்டங்கள் முன்னிலை வகித்திருந்தது. இப்போட்டியும் ''டிரா''வில் முடிய அதிக வாய்ப்பு இருப்பதால், முதல் இனிங்சில் பெற்ற முன்னிலை அடிப்படையில், சவுராஷ்டிரா அணியின் அரையிறுதி வாய்ப்பு உறுதியானது.

## லசித் மலிங்காவை சிறப்பாகக் கையாள வேண்டும், –டேவிட் ஹசி



இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் மலிங்காவைக் கையாளும் விதத்திலேயே வெற்றி அடங்கியுள்ளது என அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் டேவிட் ஹசி தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் இடம் பெற்று வரும், பிக்பாஷ் லீக் தொடரில் டேவிட் ஹசி, லசித் மலிங்கா இருவரும் மெல்பேன் ஸ்டார்ஸ் அணி சார்பாக போட்டிகளில் பங்கேற்றனர். ஆனால் தற்போது இருவரும் எதிர் எதிர் அணிகளுக்காக போட்டியிடுகின்றனர்.

இது குறித்து டேவிட் ஹசி கூறுகையில், லசித் மலிங்காவுடன் இணைந்து, மெல்பேன் ஸ்டார்ஸ் அணி சார்பாக விளையாடியது அதிஷ்டகரமானது. மலிங்கா தற்போது நல்ல பார்மில் காணப்படுவதால், இவரை சிறப்பாக கையாளவேண்டும் என்று தெரிவித்தார். மேலும் லசித் மலிங்கவை எதிர்கொள்வதற்கு, எப்போதும் பயந்ததில்லை, எனத் தெரிவித்த டேவிட் ஹசி, ஒரு துடுப்பாட்ட வீரராக தான் எப்போதும், உலகின் சிறந்த பந்து வீச்சாலர்களை எதிர்கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தலைவர் பதவியில் இருந்து டோனி விலகலாம் –டிராவிட்

20-20 போட்டிகளுக்கான அணித்தலைவர் பதவியிலிருந்து, டோனி விலக வேண்டும் என முன்னாள் அணித்தலைவர் டிராவிட் கூறியுள்ளார். சமீபத்தில் இங்கி லாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை, டோனி தலைமையிலான இந்திய அணி இழந்தது. தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான, ஒரு நாள்த் தொடரையும் பறிகொடுத்தது.

இதையடுத்து அணித்தலைவர் பதவியிலிருந்து, டோனியை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை அதிகரித்துள்ளது. இது குறித்து இந்திய அணியின், முன்னாள் அணித்தலைவர் டிராவிட் கூறுகை யில், டெஸ்ட் போட்டிகளில், அணித்தலைவராக செயற்பட டோனிக்கு தகுதியுள்ளது. இப்பொறுப்பில் சிறப்பாக செயற்படமுடியும். அனைத்து நேரங்களிலும், அணித்தலைவராக இருந்தால், அவருக்கே சலிப்பு ஏற்பட்டுவிடும். எனவே 20-20 மற்றும், ஐ.பி.எல் சென்னை அணியின், அணித்தலைவர் பொறுப்பில் இருந்து விலகி, விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தலாம். அதே நேரத்தில் 20-20 மற்றும் ஒரு நாள் போட்டியில் சாதாரண வீரராக நீடிக்கலாம்.

தற்போதைய நிலையில் அணித்தலைவர் பதவிக்கு டோனிக்கு மாற்று வீரர் யாரும் கிடையாது. ஒரு கட்டத்தில் காம்பிரை நியமிக்கலாம் என நினைத்தோம். ஆனால் காம்பிர் டெஸ்டில் பார்ம் இல்லாமல் தவித்ததால், சிக்கல் ஏற்பட்டது. மூன்று விதமான கிரிக்கட் போட்டிகளுக்குமான, அணித்தலைவர் பொறுப்பை விராத் கோஹ்லியிடம் அளிக்கலாம். இளம் வீரராக இருப்பதால், இவருக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது.

# உலகச் செய்திகள்

## மேலைநாடுகளின் ஆதிக்கத்தால் சிரியாவில் 10 இலட்சம் பேர் தவிப்பு



சிரியாப் பிரச்சினையில், மேலைநாடுகள் கண் மூடித்தனமாக, தேசிய விடுதலைப் படையினருக்கு ஆதரவளித்து வருவதாக பிரான்ஸ் நாட்டின் வலதுசாரிக் கட்சியின் தலைவர் லீ பென் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் ஜனாதிபதி பஷர்அல் - ஆசாத், பதவி விலகக் கோரி, பொதுமக்கள் நடத்தி வரும் போராட்டத்தால், அங்கு சண்டை நடந்து வருகிறது. 22மாதங்களாக நடந்து வரும் போரில், 60ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

5லட்சம் பேர் அண்டை நாடுகளில், அகதிகளாகத் தங்கியுள்ளனர். முக்கிய நகரங்களில் சண்டை நடப்பதால், அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. சண்டை காரணமாக தொழிற்சாலைகளும், வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளதால், வேலையின்றியும், உணவு இன்றியும், மக்கள் தவிக்கின்றனர்.

ஐ.நா.சபை வழங்கும் உணவைப் பயன்படுத்தி வருகின்றனர். சிரியாவில் தவிக்கும் 25லட்சம் பேரில், 15லட்சம் பேருக்கு ஐ.நா.உணவு வழங்கி வருகிறது. மீதி 10லட்சம் பேருக்கு உணவு வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளது.

எனவே இவர்கள் உணவு கிடைக்காமல், பட்டினி கிடக்க வேண்டிய அவல நிலை உருவாகியுள்ளது. இது குறித்து, பிரான்ஸ் நாட்டின் வலதுசாரிக் கட்சியின் தலைவரான லீ பென் கூறுகையில்,

சிரியாப் பிரச்சனையில் மேலைநாடுகள் கண் மூடித்தனமாக, தேசி ய விடுதலைப் படையினருக்கு, ஆதரவளித்து வருகின்ற. இவர்கள் லிபியாவில் ரகசியமாகச் செய்ததை, சிரியாவில் பகிரங்கமாகச் செய்கிறார்கள் என்று, மேலைநாடுகள் சிரியாப் போருக்கு அளித்து வரும் ஆதரவைக் குற்றம்சாட்டிப் பேசினார்.

இவர்கள் சிரியாவின் உள்நாட்டுப் போருக்கு அளித்துவரும் ஆதரவால், அதிகமாகப் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்களே எனவும், கவலை தெரிவித்துள்ளார்.

## விமானம் மீது தீவிரவாதிகள் ராக்கெட் தாக்குதல்



ஆப்கானிஸ்தானிலிருந்து, பாகிஸ்தான் நகரை நோக்கி சென்றவிமானத்தின் மீது, தீவிரவாதிகள் ராக்கெட் வீசி தாக்குதல் நடத்தியது, பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து, பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் உள்ள, குவெட்டா நகருக்கு, 44 பயணிகளைக் கொண்ட விமானம், விமான நிலையத்திலிருந்து புறப்படத் தயாரானதும், விமானத்தின் மீது ராக்கெட் குண்டு வீசி, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இருப்பினும் விமானத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை, எனவே அதில் பயணம் செய்த 44 பயணிகளும் உயிர் தப்பினர். இதனையடுத்து ஒரு மணிநேரம் கழித்து, விமானம் புறப்பட்டுச் சென்றது.

இதற்கிடையே, ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தில் உள்ள, இங்கிலாந்து படைத்தளத்தில், இராணுவ வீரரொருவரை ஆப்கான் வீரர் சுட்டுக் கொன்றுள்ளார்.

இத்தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்று உள்ளனர். இராணுவத்தில் ஊடுருவி, தங்களது ஆள் தான், இங்கிலாந்து வீரரைச் சுட்டுக் கொன்றதாக தெரிவித்துள்ளனர்.

## நாய்கள் கடித்துக் குதறியதில் 4 பேர் பரிதாப மரணம்:



மெக்சிகோவில், நாய்கள் சுற்றி வளைத்து கடித்ததில் குழந்தை, தாய் உட்பட 4பேர் பரிதாபமாக பலியாயினர். மத்திய அமெரிக்க நாடான மெக்சிகோவின், லா ஈஸ்டிரல்லா மலைப்பகுதியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு வனப்பகுதி உள்ளது.

இங்கு ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில், புதர் நடுவே கடந்த வாரம், ஒரு பெண் மற்றும் அவரது குழந்தையின் உடல்கள் மீட்கப்பட்டன, இவர்களது உடல் முழுவதும் காயங்கள் இருந்தன. இந்நிலையில், அதே காட்டின் வேறொரு பகுதியில், கடந்த 5ஆம் திகதி, இளைஞர் ஒருவர் மற்றும் இளம்பெண்ணின் உடல்கள் மீட்கப்பட்டன.

அவர்களது உடலிலும் காயங்கள் இருந்தன. பணம் மற்றும் பொருட்களுக்காக இவர்களை கொள்ளையர்கள் தாக்கி இருக்கலாம் என ஆரம்பத்தில் கருதப்பட்டது, ஆனால் விசாரணையில் கொள்ளையர்கள் தாக்கவில்லை என்பது தெரியவந்தது.

இதனையடுத்து விசாரணையைத் தீவிரப்படுத்திய பொலிசார், குகை மற்றும் பாறைகளின் நடுவே வாழும் நாய்கள் தான், கடித்துக் கொன்றுள்ளது என்பது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து தீவிர வேட்டையில், 8 குட்டிகள் உட்பட 25 நாய்கள் பிடிக்கப்பட்டன.

## தாய்க்காக கன்னித்தன்மையை விற்கும் இளம்பெண்.



தனது தாயின் மருத்துவ செலவுகளுக்காக, பிரேசிலை சேர்ந்த இளம்பெண் ஒருவர் தனது கன்னித்தன்மையை விற்கவுள்ளதாக, இணையத்தில் விளம்பரத்தை வெளியிட்டு, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். பிரேசிலைச் சேர்ந்த இளம் பெண், ரெபேக்காபெனார்டோ (வயது 18).

இவரது தாய் பக்கவாத நோயால் பாதிக்கப்பட் டுள்ளார். இந்நிலையில் ரெபேக்கா, தனது கன்னித்தன்மையை விற்கவுள்ளதாக இணையத்தில் விளம்பரமொன்றை வெளியிட்டுள்ளார். இதுகுறித்து இவரது தாய், எனது மகள் தொழில் புரிய வேண்டும்.

இதனைவிடுத்து விபசாரியாக மாறிவிடக்கூடாது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். சமீபத்தில் பிரேசிலைச் சேர்ந்த, கட்ரினா மிகிலியோரினி என்ற பெண், வீடு கட்டுவதற்காக ஜப்பானைச் சேர்ந்த ஒருவருக்கு தனது கன்னித்தன்மையை 500,000 ஸ்ரேலிங் பவுனுக்கு விற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## பாக்கிஸ்தானில் சீக்கியர் ஒருவர் தலை துண்டித்து கொலை

பாகிஸ்தானில், பாகிஸ்தானில், சீக்கியவர் ஒருவர், பயங்கரவாதிகளால் தலை துண்டித்துக் கொல்லப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் கைபர் பகுதியில் உள்ள, சகாகெல் பஜாரில், மூலிகைக் கடை நடத்தி வந்தவர், மொகிந்தர் சிங்,(40.) கடந்த ஆண்டு, நவம்பரில், ஆயுதங்களுடன் வந்த மர்ம ஆசாமிகள், இவரை கடத்திச் சென்றனர், இதற்கிடையே, கடந்த வாரம் இவரது உடல், தலை துண்டிக்கப்பட்ட நிலையில், மார்க்கெட் அருகே, வீசப்பட்டுக் கிடந்தது.

இவரது கொலைக்கு, ''தாவீத் உல்-இஸ்லாம்'' என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த அமைப்பின் எதிரியான, லஷ் கர், இஸ்லாமுக்காக, மொகிந்தர் சிங், உளவு பார்த்ததால் இவர் கொல்லப்பட்டதாக, இவரது உடல் அருகே கிடந்த ஒரு குறிப்பில், எழுதப்பட்டுள்ளது.

இது குறித்து, மொகிந்தர் சிங்கின் சகோதரர், தஸ்வந்த் சிங் கூறியதாவது: என் சகோதரரைப் பற்றி ''தாவீத் உல் இஸ்லாம்'' அமைப்பிடம் விசாரித்த போது, அவர்கள், ''தெரியாது'' எனக், கூறினர். இப்போது அந்த அமைப்பினர், இவரை கொன்றுள்ளனர். மொகிந்தர் சிங்குக்கு, ஒன்பது குழந்தைகள் உள்ளனர். இதில் ஒரு குழந்தை, ''மாற்றுத் திறனாளியாக'' உள்ளது. எனவே, இந்தக் குடும்பத்துக்கு, அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும். இவ்வாறு தஸ்வந்த் சிங் கூறினார்.

## நிலவில் 3 பெரிய பள்ளங்கள் இருப்பது கண்டுப்பிடிப்பு: வால்நட்சத்திரத்தின் தாக்குதலா?



நாம் வாழும் பூமிக் கிரகத்தின், துணைகிரகமான சந்திரனில் 3 பெரிய பள்ளங்கள் இருப்பது, தற்போது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா விண்வெளி மையமான நாசா, தனது விண்கலத்தின் உதவியுடன், எடுத்துள்ள புகைப்படத்தில், நிலவில் 3 பெரிய பள்ளங்கள் இருப்பது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாசா விஞ்ஞானிகள் கூறுகையில், இந்தப் பள்ளங்கள் எரிகல் மற்றும், வால் நட்சத்திரம் ஆகியவற்றால் ஏற்பட்டிருக்கலாம். இந்தப் பள்ளங்களின் தென்மேற்கில் அமைந்த பள்ளம், மிகவும் பெரியதாக உள்ளது, இதன் விட்டம் 180 மீற்றர் ஆகும்.

இதற்கடுத்து மத்தியில் அமைந்த பள்ளம், இது 150 மீற்றரும், வடகிழக்கு பகுதியில் அமைந்த பள்ளம், 125 மீற்றரும் என்ற அளவுகளில் உள்ளன. இந்தப் பள்ளங்கள், அடுத்தடுத்த சில நிமிடங்களில் ஏற்பட்டிருக்ககூடும், என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பக்க வடிவமைப்பு - அ.ஜினோதன்

# விந்தை உலகம்

## பால்வெளியில் பூமியைப் போன்று 1700 கோடி கிரகங்கள்



பால்வெளி அண்டத்தில் மட்டும், நமது பூமியின் அளவுடைய, 1700 கோடி கிரகங்கள் இருக்கலாம், என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக, விண்ணியலாளர்கள் கூறுகின்றனர். நமது சூரியனைப் போன்ற அளவு கொண்ட நட்சத்திரங்களை, நாசாவின் கெப்ளர் விண்வெளி தொலைநோக்கி ஆராய்ந்தது.


அப்படியான நட்சத்திரங்களில் ஆறில் ஒன்றில், பூமியின் அளவுகொண்ட கிரகங்கள், இருப்பதற்கான அறிகுறிகளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். கலிபோர்னியாவில் உள்ள அமெரிக்க விண்ணியல் ஆராய்ச்சிக் குழுமத்தின் முன்பு, இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பூமியை ஒத்த அளவில் ஏராளமான கிரகங்கள் இருந்தாலும், இவற்றில் பெரும்பான்மையானவை உயிர்கள் வாழ முடியாத அளவுக்கு, அதிக வெப்பம் கொண்டவையாக இருக்கும் என்பதை விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஒரு கோளத்தில் உயிர்கள் வாழ்வதற்கு, திரவ வடிவில் நீர் வேண்டும். ஆனாலும் ஆயிரங்கோடிக் கணக்கில், பூமியை ஒத்த கிரகங்கள் இருக்கின்றபடியால், பூமியைப் போல உயிர்கள் வாழ்வதற்கு, ஏற்ற அம்சங்களைக்கொண்டதான கிரகம் ஒன்றை, விண்ணியல் நிபுணர்கள் நிச்சயம் கண்டறிவார்கள் என்று பிபிசியிக் அறிவியல் துறை செய்தியாளர் கூறுகிறார்.

## ஜப்பான் கடலில் மின்விளக்காக ஜொலிக்கும் மீன்கள்

ஜப்பான் கடற்கரைகளில் கடல்வாழ் உயிரினங்களான Firefly Squid அதிகமாக தென்படுகின்றன. இவற்றின் உடலில் Photophores எனும் ஒளியைப் பிறப்பிக்கும் கலங்கள் காணப்படுவதால் நீலநிற ஒளியை பிறப்பித்த வண்ணமே இவை நீந்தி கரையை அடைகின்றன. 3 இஞ்சி அளவுள்ள இவை ஜெல்லி மீனினை ஒத்துக் காணப்படுகின்றன.






## 17 லட்சம் டொலர் ஏலத்தில் அரிய வகை மீன்




ஜப்பானில் உள்ள சுகிஜி, மீன் மார்க்கெட்டில் தினந்தோறும் பல மில்லியன் டொலருக்கு மீன்கள் விற்பனை செய்யப் படுகின்றன. புகழ் பெற்ற இந்த மார்க்கெட்டில் இந்த ஆண்டிற்கான முதலாவது மீன் ஏலத்தினபோது 222 கிலோ எடையுள்ள, ஒரு புளுபின் ட்யூனா வகை மீன், ஏலத்திற்கு வந்தது. இந்த ஆண்டின் முதலாவது ஏலம் என்பதால் அதை எடுப்பதற்கு கடும் போட்டி நிலவியது. இதில் அந்த மீன் 155 மில்லியன் யென்னுக்கு (இந்திய மதிப்பு சுமார் 9 கோடியே 20 லட்சம் ரூபாய்) ஏலம் போனது. ஜப்பானில் இந்த புளுபின்ட்யூனா வகை மீன்கள் பெரும்பாலும் விரும்பி சாப்பிடப்படுகிறது. ஒரு கிலோ எடை உள்ள இந்த மீனின் விலை சுமார் 7600 டொலருக்கு ஏலம் விடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முதலாவது ஏலம் எடுத்த தொகையான 55 மில்லியனைக் காட்டிலும், இது இருமடங்கு அதிகம் என்று ஏலம் எடுத்தவர் கூறினார்.


## அதிவேக தரவு பரிமாற்றம் கொண்ட USB 3.0 தொழில்நுட்பம் அறிமுகம்

தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக, இலத்திரனியல் சாதனங்களின் அளவு வெகுவாகச் சுருங்கி வருவதுடன், அவற்றின் செயற்பாடு அதிகரித்தும் வருகின்றது. இதன் அடிப்படையில், கணனிக்கும் ஏனைய இலத்திரனியல் சாதனங்களுக்கும் இடையில், விரைவாகத் தரவுகளை பரிமாற்றுவதற்காக தோற்றம் பெற்ற, USB தொழில்நுட்பமானது தற்போது மற்றுமொரு பரிமாணத்தையும் எட்டியுள்ளது.

அதாவது இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த, USB 2.0 தொழில்நுட்பத்திற்குப் பதிலாக, அதிவேக தரவுப்பரிமாற்றம் கொண்ட USB 3.0 தொழில்நுட்பம் அறிமுகமாகியுள்ளது. இதன் மூலம் சுமார் 5 Gbps தொடக்கம், 10 Gbps எனும் வேகத்தில் தரவுகளை பரிமாறிக்கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இறந்தும் உயிருடன் வாழும் மரங்கள்






இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H பதிப்பகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.01.2013 அன்று வெளியிடப்பட்ட